வருடாந்த அறிக்கை 2013

# இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

# உள்ளடக்க அட்டவணை


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 02 |
| 2. | தரம் சம்பந்தமான கொள்கை | 03 |
| 3. | இலங்கை தராதர அங்கீகார சபை சட்டம், தொலைநோக்கு, இலக்கு, குறிக்கோள் | 04 |
| 4. | கடமைகளும் செயற்பாடுகளும் | 05 |
| 5. | தலைவரின் செய்தி | 06 |
| 6. | பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் நிறைவேற்றுத் தொகுப்பு | 09 |
| 7. | ஆளுநர் சபை | 14 |
| 8. | ஸ்தாபக அமைப்பு அதிகார முறைமை | 15 |
| 9. | முகாமைத்துவம், குழுக்கள், SLAB ஊழியர்கள் மற்றும் மதிப்பீட்டாளர் குழு | 16 |
| 10. | நடவடிக்கைகள் | 19 |
| 11. | 2013 இல் முக்கிய செயற்பாடுகள் | 22 |
| 12. | சர்வதேச பெறுபேறுகளும் நிகழ்வுகளும் | 23 |
| 13. | சக்தி வள கட்டமைப்பும் பயிற்சித் திட்டங்களை நடத்துதலும் | 23 |
| 14. | நிதித்துறை முக்கிய அம்சங்கள் - 2013 | 24 |
| 15. | நிதித்துறை அறிக்கைகள் - 2013 | 24 |
| 16. | நிதிசார் அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் | 30 |
| 17. | கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் | 43 |
| 18. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மீதான தலைவரின் கருத்துக்கள் | 49 |
| 19. | இலங்கை தராதர அங்கீகார சபையின் இலச்சினை | 53 |
| 20. | தராதர அங்கீகாரக் குழுக்கள் - இணைப்பு I | 54 |
| 21. | ஸ்தாபக அமைப்பு - செயற்பாடு - இணைப்பு II | 59 |
| 22. | தராதர அங்கீகார மதிப்பீட்டு அமைப்புக்கள் - 2013 | 60 |

## அறிமுகம்

***இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராரதர அங்கீகார சபை (SLAB), இலங்கையின் தராதர அங்கீகாரத்திற்கான அதிகாரம் பெற்ற ஒரு நிறுவனமாகும். சர்வதேச மற்றும் உள்நாட்டு வர்த்தகம் தொடர்பான வசதிகளை அது வழங்குவதோடு, பொருட்கள் வழங்குகை சம்பந்தமாக இருக்கும் தீர்வையற்ற தடைகளையும் நீக்குகிறது. நாட்டின் தேசிய தர உட்கட்டமைப்பையும் இது பலப்படுத்துகிறது. தராதர அங்கீகாரம் என்பது, தற்சமயம் சுயமாகவே இடம்பெறும் ஒரு சேவையாகும். எனவே, ஒழுங்கமைப்பு நிறுவனங்கள், தொடர்ச்சியாக சட்டங்களைக் கண்காணிக்கும் கடமையில் முக்கிய பங்காற்றுவதோடு, சகல வேளைகளிலும் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் ஒத்தியல்பு மதிப்பீடு கடைப்பிடிக்கப்படுவதையும் நிச்சயிக்கிறது.***

2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, இலங்கைக்கான தராதர அங்கீகார அதிகார சபையாகும். தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் SLAB செயற்பட்டு வருகின்றது.

தேசிய தர உட்கட்டமைப்பு பூர்த்தி செய்யப்படுவதை நிச்சயிப்பதற்கு 2005 ஆம் ஆண்டிற்கு முன்னரும் இலங்கையில் தராதர அங்கீகாரத்திற்கான முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தாபனம் ஒன்று தேவைப்பட்டது. நாட்டின் தேசிய தர உட்கட்டமைப்பு என்பது, பொருட்கள் மற்றும் சேவைகள் சம்பந்தமான உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்குப் பேருதவியாக உள்ளது. அதேவேளை, தராதர அங்கீகாரத்தின் பலனாக எழக்கூடிய தீர்வையற்ற தடைகளையும் இது நீக்குகிறது. கண்காணிப்பு, பரிசோதனை, சான்றிதழ் வழங்கல் என்பன இவையாகும். மேற்குறிப்பிட்ட முக்கிய பொறுப்புக்களைப் பூர்த்தி செய்வதில் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள், சோதனை அமைப்புக்கள், சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கள் போன்ற ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களுக்கு (CAB) தராதர அங்கீகார சேவைகளை வழங்கும் பொறுப்பு SLAB யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, தரக்கட்டுப்பாடு, அளவைகள், சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை நிர்வகிக்கிக்கும் தேசிய தர உட்கட்டமைப்பின் ஏனைய முக்கிய அம்சங்களைப் பலப்படுத்தும் பொறுப்பையும் SLAB கொண்டுள்ளது.

தேசிய தர உட்கட்டமைப்பு (NQI) சம்பந்தப்பட்ட மட்டில், பொதுமக்கள் சுகாதாரம், இருப்பிடப் பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, மோசடி தடுப்பு, நீதியான வர்த்தகம் போன்ற சிறந்த வழிமுறைகளை நிலைநாட்டுவதற்கான தேசியப் பொறுப்பை, ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் கொண்டுள்ளன. அக்கறையுள்ள தரப்பினர், ஏனைய குழுவினரின் கோரிக்கையின் பேரில் தராதர அங்கீகார சேவைகள் சுயமாக வழங்கப்படுவதனால், அவற்றின் செயற்பாட்டையும், சட்டங்கள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவது பற்றியும்,

ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் தொடர்ச்சியாகக் கண்காணிப்பது அவசியமாகும். மேற்குறிப்பிட்ட சிறந்த வழிமுறைகள் நல்ல பலனைத் தரவேண்டுமானால், உற்பத்தியாளர்களும் சேவை வழங்குநர்களும், சம்பந்தப்பட்ட தரங்களையும், ஒத்தியல்பு மதிப்பீடுகளையும், அவை வழங்கப்படும் சமயத்தில் தீவிரமாகக் கடைப்பிடிப்பது அவசியமாகும். இந்தவித மூன்றாம் தரப்பு உறுதியளித்தல் என்பது, தேசிய - சர்வதேச தரங்கள் பிரயோகிக்கப்பட்டதை அடுத்து, SLAB மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இத்தகைய சகல நடவடிக்கைகளும், பக்கச்சார்பின்மை, தகைமை, நேர்மை, ஒத்தியல்பு மதிப்பீட்டின் நம்பகத்தன்மை என்பனவற்றை உறுதி செய்கின்றன. இத்தகைய மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு வழிமுறைகளுக்கு அமைய, சுதந்திரமான, தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளர்களினால் நடத்தப்படுகின்றன.

ஒத்தியல்பு மதிப்பீடுகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்படும் போது, அவை அனைத்தும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதர அங்கீகாரக் கொள்கைகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டன என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. இதன்மூலம், பொருட்களுக்கும், சேவைகளுக்கும் போதியளவு சந்தை வாய்ப்புக்களும், நீதியின் அடிப்படையிலான போட்டியும் உருவாக்கப்படுகின்றது. இறுதியாக, வாடிக்கையாளர் மற்றும் பங்காளிகள் மத்தியில் நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

இலங்கை தராதர அங்கீகார சபை, இல.546/4, காலி வீதி, கொழும்பு 3, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது. அதன் தொடர்பாடல் விபரங்கள் வருமாறு:

தொலைபேசி - 0112 372 638/9, பணிப்பாளர் - 0112 372 680
தொலைநகல் - 0112 372 629, மின்னஞ்சல் - slabmail@slab.lk, director@slab.lk

இணையத்தளம் www.slab.lk

## தரம் சம்பந்தமான கொள்கை

SLAB என்பது, உயர்மட்ட நேர்மை, திறமை, பயன்பாடு என்பனவற்றின் உச்சக்கட்ட நிலையில் தராதர அங்கீகாரத்தை வழங்குவதில் அர்ப்பணித்துப் பணிபுரியும் சேவை வழங்கும் ஸ்தாபனமாகும்.

வாடிக்கையாளர்கள், ஏனைய பங்காளிகள், வர்த்தகத் துறையினர் ஆகியோரின் மாற்றமடைந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேசமயத்தில், சர்வதேச தரங்கள் மற்றும் கொள்கைகளுக்கு உட்பட்ட வகையில் தராதர அங்கீகாரச் சேவைகளை வழங்குவதில் SLAB அர்ப்பணித்துப் பணிபுரிகிறது. சர்வதேச அங்கீகாரத்தை மேம்படச் செய்யவென, சர்வதேச நிறுவனங்களின் கடமைகளில் திறமையாகவும், செயல்திறன் மிக்கதாகவும் பங்கேற்பதற்கு SLAB தயாராகவுள்ளது.

SLAB யின் நடவடிக்கைகளில் உச்சக்கட்ட தொழில்திறனுடனான பங்களிப்பை வழங்கவென, சேவையாளர்களும், மதிப்பீட்டாளர்களும் அவர்களது தகைமைகளைத் தொடர்ச்சியாக தரமுயர்த்துவதற்கான சூழலை SLAB வழங்கும்.

ஒத்தியல்பு மதிப்பீடு மற்றும் தராதர அங்கீகாரம் என்பனவற்றின் செயற்பாடுகளையும், தேவைகளையும் சூழல் கோரிக்கைகளையும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதோடு, இவற்றில் அபிவிருத்தியை ஏற்படுத்தவென பொருத்தமான மாற்றங்களை SLAB பூர்த்தி செய்யும்.

## இலங்கை தராதர அங்கீகார சபை சட்டம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான, தராதர அங்கீகார சபை இல.32 இன் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கைக்கான தேசிய தராதர அங்கீகார சபையாகும். தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் செயற்படும் இந்தச் சபை SLAB சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பதின்மூன்று (13) அங்கத்தவர்களைக் கொண்ட மன்றத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. இதன் பணிப்பாளர், சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் (SEO) ஆளும் மன்றத்தின் செயலாளருமாவர்.

## தொலைநோக்கு

‘இந்தப் பிராந்தியத்தில் தராதர அங்கீகார முன்னணி அமைப்பாக அங்கீகரிக்கப்படுவதோடு, அதன் சேவைகள் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச அங்கீகாரத்தையும், உற்பத்திப் பொருட்களினதும் சேவைகளினதும் ஏற்றுக்கொள்ளலையும் பெறுவதற்கு உதவுதல். ஒத்தியல்பு மதிப்பீடுகளுக்கு தராதர அங்கீகார சேவைகளை வழங்கும் போது, வர்த்தகம், கைத்தொழில், அரசாங்கம் மற்றும் பொதுமக்களின் மாற்றமடையும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் புதுமை புகுத்தல்’

## இலக்கு

‘சர்வதேச அங்கீகாரத்துடன் தராதர அங்கீகாரச் சேவைகளை வழங்குதலும், முன்னேற்றுதலும் உள்ளூர் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளுக்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதில் ஒத்தியல்பு மதிப்பீடுகளுக்கு உதவுதலும்’.

## நோக்கங்களும் குறிக்கோள்களும்

சபையின் நோக்கங்களாக பின்வரும் விடயங்கள் இனங்காணப்பட்டுள்ளன. பொருத்தமான மற்றும் செயற்படுத்தும் வகைகளில் ஒவ்வொரு நோக்கத்தையும் தொடர்ந்து குறிக்கோள்கள் தரப்பட்டுள்ளன.

- ISO/IEC 17011 இணங்கும் வகையில், இலங்கை தராதர அங்கீகார சபையை முகாமைத்துவப் படுத்தலும், செயற்படுத்தலும்.
- பரிசோதனை, தரப்படுத்தல், சான்றிதழ் வழங்கல், சூழல் பாதுகாப்பு மதிப்பீடு (GHG), சரிபார்த்தல், பரிசோதனை, திறமைப் பரிசோதனைத் திட்டங்களும் (PT) சிறந்த ஆய்வுகூட வழிமுறைகளும் (GLP)
  - பயிற்சி மற்றும் விழிப்புணர்ச்சித் திட்டங்களை நடத்துதல்
  - மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை உருவாக்குதல்
- மேற்குறிப்பிட்ட துறைகளில் சர்வதேச தரங்களுக்கு ஏற்ற வகையில் தராதர அங்கீகாரத்தை வழங்குதல்.
  - 20 தராதர அங்கீகாரங்கள் வழங்கல்
- SLAB ஊழியர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் மத்தியில் சக்திவள உருவாக்கம்
  - 100 புதிய மதிப்பீட்டாளர்களுக்கு பயிற்சி
- தொழில்துறை, வர்த்தக சமூகம், அரசாங்கம், பாவனையாளரான பொது மக்கள் ஆகியோருக்குத் தரமான சேவையை நிச்சயிக்கவென SLAB நடவடிக்கைகளின் சிறந்த ஆளுமை
- SLAB தராதர அங்கீகாரத் திட்டங்களுக்கு சர்வதேச அங்கீகாரங்களைப் பெற்று தொடர்ந்து பேணுதல்.
  - QMS, EMS மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் வழங்கவென IAF MLA யைப் பெற்றுக் கொள்ளல்.
  - பரிசோதனை, மருத்துவப் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் என்பன சம்பந்தமாக ILAC MRA ஐத் தொடர்ந்து பேணுதல்
- 2016 ஆம் ஆண்டளவில் சுய பூர்த்தியடைதல்.
  - 2013 ஆம் ஆண்டில் மீள் செலவினத்திற்கு மேலாக 55% வருமானத்தை அடைதல்.

## கடமைகளும் செயற்பாடுகளும்

சட்டத்திற்கு இணங்கும் வகையில் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடையவென SLAB கீழ்க்காணும் கடமைகளையும், வழிமுறைகளையும் கடைப்பிடிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

- சர்வதேச மற்றும் தேசியத் தரங்களுக்கு ஏற்ற வகையில், ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களின் தராதர அங்கீகாரத்தைப் பூர்த்தி செய்தல்
    - ஒத்தியல்பு மதிப்பீட்டு ஆய்வு கூடங்களின் பரிசோதனை (ISO/IEC 17025)
    - மருத்துவ ஆய்வுகூடங்கள் (ISO 15189)
    - வழிமுறைகளுக்கான அமைப்புக்களின் சான்றிதழ் (ISO/IEC 17021)
    - உற்பத்திப் பொருட்களுக்கான அமைப்புக்களின் சான்றிதழ் (ISO/IEC 17065)
    - ஆட்களுக்கான அமைப்புக்களின் சான்றிதழ் (ISO/IEC 17024)
    - சூழல் பாதுகாப்பு மதிப்பீடும் (GHG) அமைப்புக்களைச் சரிபார்த்தலும் (ISO 14065)
    - அமைப்புக்களின் பரிசோதனை (ISO/IEC 17020)
    - தகைமை மதிப்பீட்டுத் திட்டங்கள் (ISO/IEC 17043)
    - சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் (GLP)

- தேசியத் தரங்கள், கொள்கைகளில் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டி நெறிகளுக்கு உட்பட்ட வகையில், தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
- சம்பந்தப்பட்ட பங்காளித்துவ அமைப்புக்களுக்கென மதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டங்களையும், விழிப்புணர்ச்சித் திட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடத்துதல்.
- ஒத்தியல்பு மதிப்பீடு பற்றிய ஒத்துழைப்பிற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய மன்றமாக செயற்படுதல்.
- தொழில்நுட்ப அறிவை மேம்படச் செய்து பரவலாக்குவதன் மூலம் ஒத்தியல்பு நடவடிக்கைகளிலும் தராதர அங்கீகாரத்திலும் உன்னத நிலையை ஏற்படுத்துதல்.
- தராதர அங்கீகாரத்திற்கென தேசிய வழிமுறை அபிவிருத்தி செய்யப்படுவதற்கு உதவுதல்.
- இதுபோன்ற வெளிநாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர அங்கீகாரம் சம்பந்தமான உடன்படிக்கைகளைப் பூர்த்தி செய்தல்.
- தராதர அங்கீகாரத்தை வழங்குதல், நீடித்தல், குறைத்தல், இடைநிறுத்தல், திரும்பப் பெறுதல் என்பனவற்றிற்கென ஒத்தியல்பு மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், நடத்துதல்.

## தலைவரின் செய்தி

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை (SLAB) என்பது, தராதர அங்கீகாரத்திற்கான தேசிய அதிகார சபையாகும். பாராளுமன்றத்தின் 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இது ஸ்தாபிக்கப்பட்டது. நாட்டின் உற்பத்திப் பொருட்கள், சேவைகள் சம்பந்தமாக, தரத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளையும் ஒழுங்கமைத்து இணங்கச் செய்வதற்கு தேவையான ஸ்தாபக அமைப்பே தேசிய தரக்கட்டுப்பாட்டு உட்கட்டமைப்பான SLAB ஆகும். எமது ஏற்றுமதிகளுக்கு தீர்வையற்ற தொழில்நுட்பத் தடைகளைக் குறைப்பதன் அடிப்படையில், சர்வதேச வர்த்தகத்திற்கு உதவவென, தராதர அங்கீகாரத்தை ஒரு முக்கிய அம்சமாகத் தரமுயர்த்துவதற்கு 2013 ஆம் ஆண்டில் பல திட்டங்கள் SLAB யினால் ஆரம்பிக்கப்பட்டன. SLAB யின் நடவடிக்கைகள், பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு, பந்தோபஸ்து, சூழல் பாதுகாப்பு என்பனவற்றிற்கும் பங்களிப்பைச் செய்கின்றன.

தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் செயற்படும் ஒரு நிறுவனம் என்ற வகையில், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, பொதுச் சுகாதாரப் பாதுகாப்பை நிச்சயித்தல் போன்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதில் SLAB முக்கிய பங்கை வகிக்கின்றது. இந்த இலக்குகளை அடைவதற்கென ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் குறிக்கப்பட்ட பல இலக்குகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். 2013 ஆம் ஆண்டோடு நாட்டு மக்களுக்கான ஏழு (07) வருட கால சேவையை SLAB பூர்த்தி செய்துள்ளது. வருங்காலத்தில் இந்த நிறுவனம் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இருந்த போதிலும், எத்தகைய சவால்களையும் வென்றெடுத்து, நிறுவனம் முன்னோக்கிச் செல்வதற்கான அடித்தளம் திட்டவட்டமாக அமைக்கப்பட்டுள்ளது என்பது எனது நம்பிக்கையாகும்.

### தேசிய ரீதியிலான முன்னுரிமைகள்

தராதர அங்கீகாரம் என்பது, சுய கோரிக்கையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படுவதனால், ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களை தராதர அங்கீகாரத்திற்கு உட்படுத்தவென, பங்காளித்துவர்கள் மத்தியில் இந்த விடயத்தை நிலைபெறச் செய்வது அவசியமாகும். இதற்கென பல்வேறு விழிப்புணர்ச்சித் திட்டங்கள் வெவ்வேறு வகைகளில் நடத்தப்பட்டன. இவற்றில் சம்பந்தப்பட்டவர்களின் சமூகம் திருப்திகரமாக இருந்தது. இருந்த போதிலும், ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் தராதர அங்கீகாரத்திற்கெனப் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை சம்பந்தமாக நாம் திருப்தியடையவில்லை. தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழுள்ள பல அமைப்புக்களுமே இந்த விடயம் சம்பந்தமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருந்த ஒழுங்கமைப்பு அதிகாரிகள் பலரை SLAB உத்தியோகத்தர்கள் சந்தித்துள்ளனர். இத்தகைய சந்திப்புக்களின் நோக்கம், சட்டங்களை நடைமுறைப்படுத்தும் கட்டத்தின்

போது, முக்கியமான தொழில்நுட்பத் தீர்மானங்களை எடுக்கும் சமயத்தில், தராதர அங்கீகாரம் வழங்கப்பட்ட தரப்படுத்தல் ஆய்வு கூடங்களின் தரவுகளை உபயோகிப்பதன் முக்கியத்துவத்தை வற்புறுத்துவதாகும்.

ஒழுங்கமைப்பு நிறுவனங்கள், தொழில்நுட்பத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, ஆய்கூவுடப் பரிசோதனை அறிக்கைகளையே ஆதாரமாகக் கொள்கின்றன. எனவே, சரியான தீர்மானங்களை எடுக்கும் போது, இந்த அறிக்கையில் வழங்கப்பட்ட பரிசோதனைப் பெறுபேறுகளின் நம்பகத்தன்மையும், சரியான தன்மையும் மிகவும் முக்கியமானவையாகும். பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான பல அமைப்புக்கள் இதுவரை தராதர அங்கீகாரத்தைப் பூர்த்தி செய்யவில்லை. இவற்றைப் பூர்த்தி செய்த சில ஒழுங்கமைப்பு நிறுவனங்களும், அவற்றைத் திட்டவட்டமாக நடைமுறைக்கிட நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எனவே, தராதர அங்கீகாரத்திற்கென ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களை SLAB க்கு அழைப்பதற்கு மேலதிக நடவடிக்கைகள் தேவை என்பது எனது கருத்தாகும். இந்த விடயத்தில் ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் முக்கிய கடமையாற்ற இருக்கின்றன. எனவே, 2014 ஆம் ஆண்டில் இந்த விடயத்தில் தீவிர மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் பணிப்புரைக்கு அமைய 'வித்தியா பிரபா 2013' என்ற அகில இலங்கை பாடசாலைகள் ஆய்வுகூடப் போட்டியை SLAB ஆரம்பித்திருந்தது. சிறந்த விஞ்ஞான ஆய்வுகூடங்கள், தராதர அங்கீகாரம், 24 மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கென தரம் மற்றும் அளவை என்பனவற்றில் விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கல்வி அமைச்சின் அனுசரணையுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதற்கான பெறுபேறு மிகவும் சிறந்ததாகும். 300 க்கும் அதிகமான விண்ணப்பங்கள் இதற்கெனப் பெற்றுக் கொள்ளப்பட்டன. இதனையடுத்து, இந்த பாடசாலை ஆய்வுகூடங்களின் மதிப்பீடுகள் தற்சமயம் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் போட்டியின் தேசிய, மாகாண, வலய வெற்றியாளர்கள் 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் அறிவிக்கப்பட இருந்தனர். உலக தராதர அங்கீகார தினம் சம்பந்தமான கொண்டாட்டங்களில் ஒரு பகுதியாக கௌரவ அமைச்சரின் தலைமையில் இதில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும், ஏனைய பரிசுகளும் வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

**சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு**

ஆசிய பசிபிக் ஆய்வுகூட தராதர அங்கீகார கூட்டுத்தாபனம் (APLAC) மற்றும் சர்வதேச ஆய்வுகூட தராதர அங்கீகார கூட்டுத்தாபனம் (ILAC) என்பனவற்றின் பரஸ்பர அங்கீகார ஒழுங்கமைப்பில் SLAB 2009 டிசம்பரில் கைச்சாத்திட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் பசிபிக் தராதர அங்கீகார கூட்டுத்தாபனத்தின் (PAC) பல நாட்டு அங்கீகார ஒழுங்கமைப்பில் ISO 9001, ISO 14001 என்பனவற்றின் தராதர அங்கீகாரத்திற்கும், உற்பத்திப் பொருள் சான்றிதழுக்குமென கைச்சாத்திடும் தகைமையை SLAB

பெற்றிருந்தது. இந்த கைச்சாத்திடும் தகைமை, சர்வதேச தராதர அங்கீகார மன்றத்தின் MLA க்கும் விஸ்தரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் ISO 22000 சான்றிதழின் தராதர அங்கீகார MLA கைச்சாத்திடும் தகைமையை SLAB க்கு வழங்கவென பசிபிக் தராதர அங்கீகார கூட்டுத்தாபனம் மதிப்பீடு செய்திருந்த, 2014 ஆம் ஆண்டில் இத்தகைய MLA தகைமை கிடைக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இத்தகைய சர்வதேச மற்றும் பிராந்திய அங்கீகாரங்கள், இலங்கை தராதர அங்கீகார சபையினால் வழங்கப்படும். தராதர அங்கீகார சான்றிதழ்களுக்கு இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் மீள் பரிசோதனை மற்றும் மீள் சான்றிதழ் வழங்கல் என்பனவற்றின் தேவைக்கு விலக்களிக்கும் வகையில் மேலதிகப் பெறுமதியை வழங்குகின்றன. SLAB தராதர அங்கீகார சான்றிதழ்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இருந்த போதிலும், கைச்சாத்திடும் தகைமையை SLAB தொடர்ந்து பேண வேண்டுமானால், அதன் தர முகாமைத்துவ வழிமுறைகள் சம்பந்தப்பட்ட சர்வதேச தரங்கள் மற்றும் குறிப்பிட்ட சர்வதேச / பிராந்திய அமைப்புக்களின் சட்டங்கள், பிரமாணங்கள் என்பனவற்றுக்கு இணங்கியிருப்பது அவசியமாகும். சம்பந்தப்பட்ட தரங்கள், சட்டங்கள், பிரமாணங்கள், வழிமுறைகள் என்பன கடைப்பிடிக்கப் படுகின்றனவா என்பது பற்றி நிச்சயிக்கவென உள்ளக மதிப்பீடுகள் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

கைச்சாத்திடும் அந்தஸ்தைத் தொடர்ந்து பேணுவதற்கு பல்வேறு கூட்டங்களிலும், கருத்தரங்குகளிலும், வருடாந்த மகாநாடுகளிலும் பங்களிப்பு அவசியமாகும். 2013 ஆம் ஆண்டில் ILAC, APLAC, IAF மற்றும் PAC யினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்காணும் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.திலக் விக்கிரமசிங்க பங்கு பற்றியிருந்தார்.

- அமெரிக்காவில் PAC யின் வருடாந்த மகாநாடு
- தென் கொரியாவில் IAF / ILAC யின் வருடாந்தக் கூட்டங்கள்
- சிங்கப்பூரில் APLAC, MRA யின் மத்திய வருடக் கூட்டம்
- வியட்னாமில் APLAC வருடாந்த மகாநாடு

PAC யின் சக்திவள அமைப்புக் குழுவின் பிரதித் தலைவராக திரு.விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன். ஆவர், PAC MLA குழுவின் அங்கத்தவராக செயற்படுகின்றார்.

**சேவை வழங்கல்**

SLAB யில் ஊழியர்களின் ஆட்சேர்ப்பும், அவர்களது சேவையைத் தொடர்ந்து பெறுதலும் முக்கிய பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. 2013 ஆம் ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் 60% ஆன வெற்றிடங்களே நிரப்பப்பட்டிருந்தன. இது, ஸ்தாபனத்தின் உற்பத்தித் திறனையும், செயல்திறனையும் பெரிதும் பாதித்தது. இருந்த போதிலும்,

SLAB ஊழியர்களின் திறனும், கடின உழைப்பும், அர்ப்பண சிந்தை என்பன காரணமாக, பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டன. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் தராதர அங்கீகாரத்திற்கென குறிப்பிடப்பட்ட இலக்கில் 75% ஆனவை பூர்த்தி செய்யப்பட்டமை மகிழ்சசிக்குரிய விடயமாகும்.

2014 ஆம் ஆண்டில் தற்போதைய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையைத் தொடர்ந்து பேணும் வகையில், அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்திக்கான நடவடிக்கைகளுக்கும், பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முயற்சிகளுக்கும் உதவும் வகையில், அதன் சகல நடவடிக்கைகளும் விஸ்தரிக்கப்பட இருக்கின்றன.

**பாராட்டுக்கள்**

முகாமைத்துவம் உட்பட SLAB ஊழியர்களின் அர்ப்பணித்த சேவையே இந்த நிறுவனத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும். இந்த சமயத்தில் SLAB ஊழியர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிக்க நான் விரும்புகின்றேன். கடந்த மூன்று வருட காலமாக எனது தலைமையில் சேவையாற்றிய குழு அங்கத்தவர்களுக்கு எனது விசேட நன்றிகள் உரித்தாகுக. நிறுவனத்திற்கான உங்களது விசுவாசமும், அர்ப்பணிப்பும் பெரிதும் பாராட்டப்படுகிறது. திரு.பாசன் பிரியலால் குணசேன தலைமையில் 2013 ஜுலை மாதத்தில் கௌரவ தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரினால் புதியதொரு குழு நியமிக்கப்பட்டது. SLAB அலுவலகம் ஒன்றை அமைக்கவென மாலபேயில் கைத்தொழில் தொழில்நுட்ப நிலையத்தின் காணியில் இருந்து 80 பேர் காணியை விடுவிப்பதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டிருந்தார். இந்த வகையில் திரு.குணசேனவின் முயற்சிகளும், புதிய குழுவினரின் நடவடிக்கைகளும் பாராட்டத்தக்கவை.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் SLAB யின் நடவடிக்கைகளுக்கும், வெற்றிக்கும் பங்களிப்பை வழங்கிய கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க - தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சர், திருமதி தாரா விஜேதிலக, தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் ஊழியர்கள் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறைவாக நாட்டின் தராதர அங்கீகாரம் சம்பந்தமாக தொடர்ந்து ஆதரவும், பெறுமதிமிக்க சேவைகளையும் வழங்கிய SLAB மதிப்பீட்டாளர்கள், கொள்கை ஆலோசனை குழுவின் அங்கத்தவர்கள், தராதர அங்கீகார குழுவினர், தொழில்நுட்ப ஆலோசனை குழுவினர், நிபுணத்துவக் குழுவினர் ஆகியோருக்கு எனது மனப்பூர்வமான நன்றிகைள நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

திதுல் கொதாகொட
தலைவர்

**பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் நிறைவேற்றுத் தொகுப்பு**

SLAB அதன் நடவடிக்கைகளை 2006 ஜனவரியில் ஆரம்பித்து 2013 ஆம் ஆண்டில் ஏழு (07) வருடகால நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன. ஆரம்பத்தில் நிறுவனத்தின் நடவடிக்கைகள் தாமதமாக இருந்த போதிலும், காலக்கிரமத்தில் துரித முன்னேற்றம் ஏற்பட்டது. படிப்படியாக, தராதர அங்கீகாரத் திட்டங்களுக்கென SLAB அதன் வாடிக்கையாளர்களைப் பெற்றுக்கொண்டது. இருந்த போதிலும், இவை குறைந்த எண்ணிக்கையிலேயே இருந்தன. முக்கியமான தராதர அங்கீகாரத் திட்டங்கள் சம்பந்தமாக, சர்வதேச அங்கீகாரத்தை SLAB பெற்றுக்கொண்டுள்ள போதிலும், ஒழுங்கமைப்பு நிறுவனங்களிடமிருந்து தராதர அங்கீகாரம் சம்பந்தமாக சொற்ப எண்ணிக்கையான கோரிக்கைகளே கிடைத்தன. எனவே, ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களை அபிவிருத்தி செய்யும் அதேசமயத்தில், தேசிய தர உட்கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கான (NQI) அவசியமும் ஏற்பட்டது. தேசிய தர உட்கட்டமைப்பு பூர்த்தி செய்யப்பட்டு, தேவைக்கு எற்ற விதத்தில் ஒத்தியல்பு மதிப்பீட்டு வழிமுறைகள் தரமுயர்த்தப்பட்டு, ஒழுங்கமைப்பு ஆதரவு வழங்கப்பட்டால் மாத்திரமே, நாட்டில் தராதர அங்கீகார வழிமுறைகள் அபிவிருத்தியடையும்.

தராதர அங்கீகாரம் சந்தை நடவடிக்கைகளில் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. தரமான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கோரிக்கை சந்தையில் அதிகரிக்குமிடத்து தராதர அங்கீகாரம் மற்றும் ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான அவசியமும் வற்புறுத்தப்படுகிறது. ஒழுங்கமைப்பு வழிமுறை என்ற விடயத்தில், ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் என்ற அரச அமைப்புக்கள் - தரம், சுகாதாரம், பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, மோசடி தடுப்பு, நியாயமான சந்தை என்பன சம்பந்தமான அங்கீகாரத்தை வழங்கும் விதத்தில், சட்டங்கள் நடைமுறைக்கிடப்படுவது அவசியமாகும். பல்வேறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பல்வேறு ஒத்தியல்பு மதிப்பீடுகளில் சிறந்த வர்த்தக வழிமுறைகள் இதுவரை நடைமுறைக்கிடப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

***தராதர அங்கீகாரம் என்பது, சுய விருப்பத்தின் அடிப்படையிலான சேவையாக வழங்கப்படுகிறது. சுயவிருப்ப வழிமுறைகளில் சேவைத்துறை உட்பட அமைப்பின் பலதரப்பட்ட துறைகளும் உற்பத்திப் பொருட்கள், வழிமுறைகள், செயன்முறைகள் என்பன சம்பந்தமாக குறிப்பிட்ட தரங்களைப் பெறும் நோக்கத்தில், சம அடிப்படையிலான போட்டியை நிச்சயித்து, சந்தைப்படுத்தல், ஒப்பிடுதல் என்பன இடம்பெற வகை செய்து, தராதர மதிப்பீட்டையும், சான்றிதழ் வழிமுறைகளையும் அமைத்துக் கொண்டுள்ளன. நாட்டிற்குள்ளேயும், உலகளாவிய ரீதியிலும், பொருட்களையும் சேவைகளையும் வழங்கும் வர்த்தகத்துறைக்கு இந்த வழிமுறைகளை செயற்படுத்த முடியும்.***

***தொழில்நுட்ப சட்டங்கள் (நியதிக்குட்பட்டது) அல்லது தரங்கள் (சுயவிருப்பம்) என்பனவற்றிற்கு உட்பட்ட வகையில் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவது குறித்துரைக்கப்பட்ட தேவைகளுக்கான திறமையான நம்பகமான ஒத்தியல்பு மதிப்பீட்டு***

***வழிமுறைகளில் தங்கியுள்ளது. எனவே, ஆய்வுகூடங்கள் பரிசோதனை அமைப்புக்கள், சான்றிதழ் நிலையங்கள் போன்ற ஒத்தியல்பு மதிப்பீட்டு நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான தகைமையைக் கொண்டிருப்பது அவசியமாகும். இத்தகைய நடவடிக்கைகளை வெளிப்படையாகவும், நம்பகமான முறையிலும் மேற்கொள்வதற்கு குறிப்பிட்ட தராதர மதிப்பீட்டு அமைப்புக்கள் தகைமை வாய்ந்தனவா என்பதை கொள்வனவாளர்கள், ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் அறிந்துகொள்வது அவசியமாகும்.***

மூன்றாம் தரப்பு உறுதியளிப்பு என்ற வகையில், தராதர அங்கீகாரம் ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதிகளில் உரிய அங்கீகாரத்தையும், பெறுகைகளையும் வழங்குகிறது. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள், தரங்கள் என்பனவற்றின் அடிப்படையில், ஒத்தியல்பு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு இது அவசியமாகும். சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தராதர அங்கீகார சபை என்ற வகையில், SLAB எதிர்நோக்கும் முக்கிய சவால் என்பது, சர்வதேச கொள்கைகளுக்கு ஏற்புடையதான, தரமுயர்த்தப்பட்ட, தராதர அங்கீகார அம்சங்களையும், வழிமுறைகளையும் தொடர்ந்து வைத்திருப்பதாகும். இந்த வகையில், மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கை என்னவென்றால், SLAB முகாமைத்துவ வழிமுறைகள் மற்றும் சம்பந்தப்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்கள் என்பனவற்றின் செயற்பாட்டிற்கான கைந்நூல்கள் மற்றும் வழிமுறைகளின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு என்பதாகும். இந்த வகையில், சர்வதேச தராதர அங்கீகாரத் தேவைகள் கண்காணிக்கப்படுவதும், தேசிய வழிகாட்டல் நெறிகள் தரமுயர்த்தப்படுவதும், மீளாய்வு செய்வதும் அடங்கும்.

ஒத்தியல்பு மதிப்பீட்டு நடவடிக்கைகளின் அளவும், எதிர்பார்ப்பும் அதிகரிக்கும் போது, ஊழியர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களின் தொழில் தகைமை அபிவிருத்தி என்பது, முக்கியமான சவாலாக உள்ளது. 2013 ஆம் ஆண்டிலும் ஆளணி பற்றாக்குறை, நிதிக் கட்டுப்பாடு என்பன இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் தகுதிவாய்ந்த, நம்பகமான மூலவள ஆதாரங்களை SLAB தொடர்ந்து பேணி வந்துள்ளது.

தராதர அங்கீகாரம், வர்த்தக வழிமுறைகள் என்பனவற்றின் தேவைகளின் அடிப்படையில் SLAB யின் நோக்கம் மற்றும் இலக்கு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக விண்ணப்பங்களின் பல்வேறு அம்சங்களும் மதிப்பிடப்பட்டன. 2013 ஆம் ஆண்டிலும் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள், மருத்துவ ஆய்வுகூடங்கள், சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் (வழிமுறைகள், உற்பத்திகள், நபர்கள்) மற்றும் பரிசோதனை அமைப்புக்கள் என்பனவற்றுக்கு தராதர அங்கீகாரத்தை சர்வதேச தரத்திற்கு உட்பட்ட வகையில் SLAB வழங்கியது.

2013 ஆம் ஆண்டில் முக்கிய நடவடிக்கையாக பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வு கூடங்களுக்கு தராதர அங்கீகாரம் வழங்கும் நடவடிக்கை அமைந்திருந்தது. இந்தத் திட்டம் இரசாயன உற்பத்திப் பொருட்கள், உணவு மற்றும் விவசாயம், புடவை வகைகள், மண் மற்றும் உரம் போன்ற பல துறைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் வளிமண்டலவியல் மற்றும் நாட்டிலுள்ள பரிசோதனை ஆய்வுகூடங்கள், உரிய முறையில்

செயற்படுவதற்கு தேவையான தர உறுதிப்பாட்டு ஆதரவு என்பனவற்றைக் கட்டியெழுப்பவும், வழங்கவும் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மருத்துவ ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம் என்பது, 2013 ஆம் ஆண்டில் முக்கிய கவனத்தைப் பெற்ற மற்றொரு துறையாகும். நாட்டில் மருத்துவ ஆய்வுகூடச் சேவைகளை அபிவிருத்தி செய்வதில் சுகாதார அமைச்சுடன் இணைந்து SLAB நடவடிக்கை மேற்கொண்டது. நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் பொதுமக்களின் சுகாதாரம் என்பனவற்றுக்கான ஒழுங்கமைப்பு அதிகார அமைப்பாக சுகாதார அமைச்சு இருப்பதனால், மருத்துவ ஆய்வுகூட தராதர அங்கீகாரம் சம்பந்தப்பட்ட மட்டில், சுகாதார அமைச்சின் அனுசரணை மிகவும் அவசியமாகும். ஆய்வு கூடங்களைத் தரமுயர்த்துவதில் சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆரம்பத்தில் அரச வைத்தியசாலைகளிலுள்ள இனங்காணப்பட்ட ஐந்து ஆய்வுகூடங்கள் தரமுயர்த்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, அரசாங்க மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த மருத்துவ ஆய்வுகூடங்களைப் பதிவு செய்வதற்கான படிப்படியான திட்டமும் பிரேரிக்கப்பட்டுள்ளது. இதில் ஒத்தியல்பு மதிப்பீட்டுப் பங்காளியாக SLAB இருந்து வரும். 2013 ஆம் ஆண்டில் SLAB மேற்கொண்ட மற்றொரு முக்கிய நடவடிக்கை, ஒத்தியல்பு மதிப்பிட்டில் மருத்துவ ஆய்வுகூடங்களின் ஊழியர்களினது தகைமை அபிவிருத்தியாகும்.

***ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் சம்பந்தப்பட்ட மட்டில், வழிமுறைகள் மற்றும் உற்பத்திப் பொருட்களுக்கான சான்றிதழ் வழங்கல் என்பது முக்கியமான நடவடிக்கையாகும். பொருட்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் இறுதிக் கட்டத்தில், அவற்றின் தரம் சம்பந்தமான மூன்றாம் தரப்பு உறுதிப்பாடு கோரப்படுகிறது. இலங்கையில் வெளிநாட்டு தராதர அங்கீகார அமைப்புக்களினால் முக்கிய பங்களிப்பு தொடர்ந்து வழங்கப்படுகிறது.பொருட்களின் கொள்வனவாளர் என்ற வகையில், அவை பெற்றுக்கொள்ளப்படும் இடத்தில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் தராதர சான்றிதழ்கள் பற்றி தீவிர கவனம் செலுத்துவதனால், இலங்கையில், வெளிநாட்டு தராதர அங்கீகார அமைப்புக்கள் முக்கிய பங்களிப்பைச் செலுத்துகின்றன.***

***மற்றொரு விடயம், வெளிநாட்டு தராதர அங்கீகார அமைப்புக்களினால் வழங்கப்படும் வெளிநாட்டுச் சான்றிதழ்களை, உற்பத்தியாளர்கள் தொடர்ந்தும் விரும்புவதாகும். இதன்பலனாக, உள்ளூர் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள், வெளிநாட்டு சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களின் தீவிர போட்டியை எதிர்நோக்குவதை அடுத்து, பெருந்தொகை நாணய மாற்றைச் செலவிட்டு, வெளிநாட்டு தராதர அங்கீகாரத்தை தொடர்ந்து பெற்றுக்கொள்கின்றன. இருந்த போதிலும், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகள் கேள்விக்குரியவை என்பதனால், வெளிநாட்டு சான்றிதழ் அமைப்புக்களின் நம்பகத்தன்மையும் சந்தேகத்திற்கிடமாகியுள்ளது. சர்வதேச மகாநாடுகளைக்கூட அவற்றின் செயற்பாடு சம்பந்தமாக தொடர்ந்து கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.***

***பிரபல வெளிநாட்டு தராதர அங்கீகார அமைப்புக்களுடன், சமமான நம்பகத்தன்மை அடிப்படையில் SLAB சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. எனவே, தேசிய தராதர அங்கீகாரம் சம்பந்தமான அங்கீகார சான்றிதழ்கள் என்பது, தற்போதைய காலகட்டத்தில் அவசியமாகவும், சிக்கனமான நடவடிக்கையாகவும் வந்துள்ளது.***

உற்பத்திப் பொருள் சன்றிதழ் என்பது, பல்வேறு உற்பத்திப் பொருட்கள், சேவைகள் சம்பந்தமான சான்றிதழ் வழங்கல் என்பதாகும். இலங்கை தேயிலை மற்றும் SLS அடையாளம் என்பனவற்றுக்கு மேலதிகமாக, இலங்கை கறுவா, சுகாதார சுற்றுலா, ஆயுர்வேத உற்பத்திப் பொருட்கள், சேதன உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றுக்கும் இது பொருந்தும்.

பரிசோதனை அமைப்புக்கள் சம்பந்தமான தராதர அங்கீகாரத் திட்டம் என்பது, மிகவும் விரிவானதாகும். ஒழுங்கமைப்பு அதிகார நிறுவனங்களிடம் இருந்து குறைந்த எண்ணிக்கையான விண்ணப்பங்களே பெற்றுக்கொள்ளப்பட்டதனால், இதன் முன்னுரிமை தொடர்ந்தும் குறைந்திருந்தது. இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் ஒழுங்கமைப்பு அதிகார அமைப்புக்களினால் தராதர அங்கீகாரம் பெற்ற CAB களின் உபயோகம், தொழில்நுட்ப சட்டங்கள் திட்டவட்டமான முறையில் நடைமுறைக்கிடப்படுவதற்குத் தேவையான ஒரு விடயமாக ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளில் தராதர அங்கீகார செயற்பாடுகளின் மேம்பாட்டிற்கான பிரதான நடவடிக்கையாக முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த வகையில் ஒழுங்கமைப்பு அதிகார நிறுவனங்களுடன் SLAB நெருங்கிப் பணியாற்றியுள்ளது. உணவுப் பாதுகாப்பு பரிசோதனை, வாகனப் புகை பரிசோதனை, பொழுதுபோக்கு பூங்கா பரிசோதனை என்பன தராதர அங்கீகாரத்திற்கென புதிதாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட துறைகளாகும். மேற்குறிப்பிட்ட துறைகளுக்கான தராதர அங்கீகார சேவைகள் ISO/1EC 17020 க்கு அமைய, சம்பந்தப்பட்ட துறைகளின் நிபுணர்கள் மற்றும் தொழில் துறையினரின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட மற்றொரு துறை, திறமைப் பரிசோதனைச் சேவையாகும். ஆய்வுகூடங்களினால் தயாரிக்கப்பட்ட பரிசோதனை மற்றும் ஒத்தியல்பு மதிப்பீடுகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கென சர்வதேச வழிமுறைகளுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டதே PT சேவைகளாகும். 2013 ஆம் ஆண்டில் உள்ளூர் PT சேவை வழங்குநர்களுக்கு நிதிச் சலுகைகளை SLAB தொடர்ந்து வழங்கியதோடு ISO/IEC 17043 க்கு உட்பட்ட வகையில் தராதர தங்கீகாரம் வழங்கப்படுவதற்கும் ஊக்கமளித்தது. PT சேவை வழங்குநர்களுக்கான தராதர அங்கீகாரத்திற்கான அதிவிசேட பிரமாணங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வுகூடங்களைத் தரமுயர்த்துவதற்கான விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் வழிமுறைகளைக் கடைப்பிடிக்கும் வகையிலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வுகூடங்களை மேம்படச் செய்வதற்கான திட்டங்களை தயார்நிலைப்படுத்தும் வகையிலும், சிறந்த ஆய்வுகூட

வழிமுறைகளுக்கான தராதர அங்கீகாரத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டதோடு, இதற்கான அதிவிசேட பிரமானங்களும் உருவாக்கப்பட்டுள்ளது.

***சக்தி வளத்தைச் சேமிப்பதற்கான ஒரு நடவடிக்கையாக, பசுமை வாயு பெறுமானத்திற்கும் அமைப்புக்களின் சரிபார்த்தலுக்குமென ISO 14065 க்கு உட்பட்ட வகையில் SLAB 2013 இல் புதிய தராதர அங்கீகாரத் திட்டம் ஒன்றைத் தயாரித்தது. இதனடிப்படையில், சக்தி வள சேமிப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை ஓரளவு கட்டுப்படுத்தவும் முடியும். உலக நாடுகளில் அவற்றின் தேசியத் திட்டங்களுக்கும், இலக்குகளுக்கும் அமைய, பசுமை வாயுப் பெறுமானம் மற்றும் சரிபார்த்தல் அமைப்புக்களுக்கு, தராதர அங்கீகாரத்தை வழங்க, தராதர அங்கீகார அமைப்புக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு, பசுமை வாயுப் பெறுமானம் / சரிபார்த்தல் அமைப்புகளுக்கு PAC/MLA ஐ வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை PAC மேற்கொண்டுள்ளது.***

***சக்திவள முகாமைத்துவ வழிமுறைகளை அபிவிருத்தி செய்தல் என்பது, ISO 50001 இன் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட முகாமைத்துவத்தின் புதியதொரு கருவியாகும். ISO 50001 உடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் தொழிற்சாலைகள் சக்திவளத்தைச் சேமிக்க முடியும். இந்த அணுகுமுறை, தேசிய எரிபொருள் பாவனையை குறிப்பிட்ட அளவு குறைப்பதனால், தேசிய பொருளாதாரத்தின் மீதான தாக்கமும் குறைக்கப்படும்.***

குறிப்பிட்ட கடமைகளைப் பூர்த்தி செய்வதில் தராதர அங்கீகாரம் என்பது, திறமையுடன்கூடிய தகைமையைக் கருதுவதனால், தரம் மற்றும் தராதர அங்கீகாரம் தொடர்பாக பல்வேறு பயிற்சித் திட்டங்களையும், செயலமர்வுகளையும் SLAB நடத்தியுள்ளது. SLAB மதிப்பீட்டாளர்கள், ஆய்வுகூட ஊழியர்கள், ஏனையோரை இலக்காகக் கொண்டு இவை நடத்தப்பட்டன. ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான அடிப்படை அம்சங்களை உருவாக்குவதற்கு திறமை அபிவிருத்தி அவசியமானதாகும். இவற்றுக்கு மேலாக, முக்கியமான குழுக்கள் சம்பந்தமான தராதர அங்கீகாரம் தொடர்பாக விழிப்புணர்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

2013 ஆம் ஆண்டின் SLAB யின் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள அதேசமயத்தில், தராதர அங்கீகார சேவை வழங்கலிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டு இறுதியளவில் 80 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் இருந்தனர். இவர்களில் மூன்று நிறுவனங்கள் வெளிநாடுகளைச் சேர்ந்தவை. தொழில்நுட்பத்துறை மற்றும் சேவை வழங்கல் என்பனவற்றில் மூலவள எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது.

SLAB 18 மில்லியன் ரூபாவை 2013 ஆம் ஆண்டின் வருமானமாக பெற்றிருந்தது. திறைசேரியில் இருந்து பெறப்பட்ட நிதியை மட்டுப்படுத்திய போதிலும், நிதித்தளம் பலமடைந்து காணப்பட்டது. நிதி சம்பந்தப்பட்ட மட்டில் 2016 ஆம் ஆண்டில் SLAB சுயபூர்த்தியடைந்து விடும் என நம்பப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைவதில் ஆளுநர் சபையினர், SLAB ஊழியர்கள், மதிப்பீட்டாளர்கள், குழு அங்கத்தவர்கள், ஏனையோர் வழங்கிய உதவிகள் பாராட்டத்தக்கவை. இவர்களது ஆதரவு இல்லாவிட்டால், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் SLAB அடைந்த முன்னேற்றத்தைப் பெற்றிருக்க முடியாது. அவர்கள் தொடர்ந்தும் அளித்து வரும் ஆதரவிற்கும், SLAB யின் சேவைகளினது நம்பகத்தன்மைக்கான நம்பிக்கை அதிகரிப்பிற்கும் இந்தத் தருணத்தில் சகலருக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

திலக் விக்கிரமசிங்க
பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

| ஆளுனர் சபை |
|---|
| சபையின் அதிகாரங்களும், நடவடிக்கைகளும் ஆளுனர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2005 ஆம் ஆண்டின் SLAB சட்டத்தின் 32 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கௌரவ தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட 13 அங்கத்தவர்கள் இந்த ஆளுனர் சபையில் இடம்பெற்றுள்ளனர். ஒவ்வொரு மாதமும் இந்தச் சபை கூடுவது வழக்கமாகும்.<br>2013 டிசம்பர் 31 ஆம் திகதியில் ஆளுனர் சபையில் கீழ்க்காணும் அங்கத்தவர்கள் இடம்பெற்றிருந்தனர். |

| | |
|---|---|
| திரு.பாசன் பிரியலால் குணசேன | தலைவர் - தொழிற்படு சட்டத்தரணி |
| திரு.மாதவ வித்தியாரத்ன | மேலதிகச் செயலாளர் - தொழில்நுட்ப மாற்றம் (தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதிநிதி) |
| கலாநிதி நிர்மாலி டி சில்வா | சிரேஷ்ட விரிவுரையாளர் - மொறட்டுவ பல்கலைக்கழகம் (தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதிநிதி) |
| திரு. சுனந்த பெர்னாண்டோ | சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிலையப் பிரதிநிதி) |
| திரு.கே.ஏ.வை.ஆர்.எஸ்.சமரசிங்க | உதவிப் பணிப்பாளர் திட்டமிடல் (உள்நாட்டு வர்த்தக அமைச்சின் பிரதிநிதி) |
| திரு. அசித்த கே செனவிரத்ன | மேலதிகச் செயலாளர் - கொள்கை அபிவிருத்தி (கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி) |
| திரு.கே.பி.குமார | பதில் பணிப்பாளர் (அளவை அலகுகள் தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பிரதிநிதி) |
| பேராசிரியர் டபிள்யூ.அபேவிக்கிரம | தலைவர் ITI (தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதிநிதி) |
| பேராசிரியர் நதீர கருணாவீர | பேராசிரியர் ஒட்டுண்ணியியல்துறை (தேசிய விஞ்ஞான மன்றத்தின் பிரதிநிதி) |
| செல்வி எல்.யூ.என்.சமரசேகர | பணிப்பாளர் - விவசாய தொழில்நுட்பம் (விவசாய அமைச்சின் பிரதிநிதி) |
| திரு. கே.ஏ.எஸ்.கீரகல | மேலதிகச் செயலாளர் - அபிவிருத்தி (சுகாதார அமைச்சின் பிரதிநிதி) |
| திருமதி ஹிரன்சா களுதந்திரி | பணிப்பாளர் - வர்த்தகத் தீர்வைகள் மற்றும் முதலீட்டு அபிவிருத்தி திணைக்களம் (பொதுத் திறைசேரியின் பிரதிநிதி) |
| திரு.கே.மல்லிமாராச்சி | முன்னாள் தலைவர் (FCCISL இல் பிரதிநிதி) |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | செயலாளர், பணிப்பாளர் / பிநிதி அதிகாரி SLAB |

## SLAB - ஸ்தாபக அமைப்பு – செயற்பாடுகள்



## செயற்பாடுகளின் முகாமைத்துவம்

இலங்கை தராதர அங்கீகார சபையின் முகாமைத்துவ நடவடிக்கைகள் அனைத்தும் பணிப்பாளர் / பி.நி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஸ்தாபக அமைப்பில் தெரிவிக்கப்பட்டவாறு சபையின் சகல நிறைவேற்று நடவடிக்கைகளுக்கும் தொழில்நுட்ப, நிதி, நிருவாக ஊழியர்களின் அனுசரணையுடன் பணிப்பாளர் / பி.நி.அ பொறுப்பாக உள்ளார்.

## குழுக்கள்

ஆளுநர் சபைக்கு வழிகாட்டி ஆலோசனை வழங்கவும், இலங்கை தராதர அங்கீகார சபையின் நடவடிக்கைகள், கடமைகளை நிறைவேற்றவுமென, சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்ற கீழ்க்காணும் தொழில்நுட்பக் குழுக்களை ஆளுநர் சபை நியமித்துள்ளது.

**கொள்கை ஆலோசனைக் குழு**

கொள்கை ஆலோசனைக் குழு, இலங்கை தராதர அங்கீகார சபையின் பலதரப்பட்ட துறைகளினதும் அபிவிருத்தி மற்றும் தராதரத் திட்டங்களின் செயற்பாடு என்பன சம்பந்தமான கொள்கை விடயங்களில் ஆளுநர் சபைக்கு ஆலோசனை வழங்குகிறது.

**தரார அங்கீகாரக் குழுக்கள்**

சம்பந்தப்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாடு சம்பந்தமான விடயங்களில் ஆலோசனை வழங்குவதிலும், ஒத்தியல்பு மதிப்பீடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அங்கீகரிப்பதிலும் கீழ்க்காணும் தராதர அங்கீகாரக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

1. பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு
2. மருத்துவ ஆய்வுகூடங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு
3. சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு
4. பரிசோதனை அமைப்புக்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு

**தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள்**

சம்பந்தப்பட்ட கடமைகளினால் தீர்மானிக்கப்பட்ட விடயங்களில் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கான பொறுப்பை கீழ்க்காணும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழூக்கள் கொண்டுள்ளன:

1. இரசாயனப் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
2. உயிரியல் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
3. இயந்திரவியல் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
4. வைத்தியப் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
5. சேதனச் சான்றிதழ் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
6. சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
7. உணவுப் பாதுகாப்பு சோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
8. வாகனங்களின் புகை வெளியேற்றப் பரிசோதனை பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
9. தர முகாமைத்துவ வழிமுறைகள் சான்றிதழ் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
10. சூழல் முகாமைத்துவ வழிமுறைகள் சான்றிதழ் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
11. பசுமை இல்ல GAS சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக்குழு

**நிபுணத்துவக் குழுக்கள்**

இவற்றுக்கு மேலதிகமாக, உயிரியல் இரசாயனம், heamatotogy, நுண்ணுயிரியல், நுண்திசு நோய் இயல் (histopathology) தரப்படுத்தல், வழிமுறை செல்லுபடியாக்குதல், மருத்துவம் சம்பந்தமான பொருட்கள் மற்றும் அளவைகளின் நிச்சயமற்ற தன்மை ஆகிய துறைகள் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்களுக்கு உதவவென, நிபுணத்துவக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

கொள்கை ஆலோசனைக் குழு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு என்பனவற்றின் விபரங்கள் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளது.

**மனித வளம்**

SLAB யின் மனித வள அமைப்பில் சிறியளவிலான உள்ளக ஊழியர் குழுவும், கல்வி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பட்ட தொழில்திறன் நிறுவனங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பாளர்களைக் கொண்ட பாரியளவிலான அமைப்பும் அடங்கும்.
நிறுவனங்களின் ஒத்தியல்பு மதிப்பீட்டின் தரத்தை உறுதி செய்வதே SLAB யின் கடமையாகும். ஆரம்ப காலத்தில் இருந்தே SLAB ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக, சபையின் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த அதேசமயத்தில், ஊழியர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதை அடுத்து, ஏனைய தராதர அங்கீகார அமைப்புக்களுக்கு சமமாக SLAB யும் அதன் தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. சாதாரணமாக, புதிதாக சேர்ந்து கொண்ட அதிகாரி ஒருவர், சம்பந்தப்பட்ட துறையில் தகைமை பெறுவதற்கு குறைந்தது மூன்று வருடங்கள் தேவைப்படும்.

## SLAB ஊழியர்கள்

2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்று சபையில் கடமையாற்றிய ஊழியர்களின் விபரம் பின்வருமாறு:

| பதவி | அங்கீகாரம் | நியமனம் | (வெற்றிடம்) |
|---|---|---|---|
| பணிப்பாளர் / பி.நி.அ | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் | 01 | -- | (01) |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (தராதர அங்கீகாரம்) | 09 | 09 | - |
| பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) | 01 | 01 | - |
| உதவிப் பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு ) | 01 | 01 | (கடமை மேற்பார்வை) |
| முகாமைத்துவம் / கணக்கியல் உதவியாளர் | 04 | 04 | - |
| சாரதிகள் | 02 | 02 | - |
| அலுவலக உதவியாளர்கள் | 02 | 02 | - |

## மதிப்பீட்டாளர் குழு

பலதரப்பட்ட துறைகளின் நடவடிக்கையில் தராதர அங்கீகாரத் திட்டச் செயற்பாட்டில் SLAB சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துமும், பயிற்சியும் பெற்ற மதிப்பீட்டாளர்களின் சேவைகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. SLAB ஊழியர்களுடன் கடமைகளைப் பொறுப்பேற்கவென, பயிற்சிபெற்ற வெளிவாரி மதிப்பீட்டாளர் குழுவொன்று (190) இதற்கென அமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான கடமையைப் பொறுப்பேற்க முன்னர், அதற்கான தகைமைகளைப் பெறவென மதிப்பீட்டுப் பயிற்சியாளர்கள் குறிப்பிட்ட தொழிலிலும், குறிப்பிட்ட இடத்திலும் பயிற்சி பெற்றிருப்பது அவசியமாகும். தராதர அங்கீகாரச் சேவையின் தேவைகளின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டில் SLAB மதிப்பீட்டாளர் குழுவை விஸ்தரிக்கவென நான்கு மதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. 2013 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் SLAB மதிப்பீட்டாளர் குழுவின் விபரங்கள் வருமாறு:

| தராதர அங்கீகாரத் துறை | தலைமை மதிப்பீட்டாளர்கள் | தொழில்நுட்ப மதிப்பீட்டாளர்கள் | பயிற்சி பெறும் மதிப்பீட்டாளர்கள் |
|---|---|---|---|
| பரிசோதனை | -- | 21 | 31 |
| தரப்படுத்தல் | 01 | 05 | 06 |
| மருத்துவப் பரிசோதனை | 01 | 15 | 36 |
| சான்றிதழ் | 03 | 14 | 23 |
| பரிசோதனை | 01 | 01 | 33 |
| பசுமை இல்ல சரிபார்த்தல் | -- | -- | 25 |
| GLP | -- | -- | 25 |
| SLAB ஊழியர் | 03 | 02 | -- |
| மொத்தம் | 09 | 58 | 129 |

**நடவடிக்கைகள்**

**ISO/IEC 17011 க்கு உட்பட்ட SLAB தராதர அங்கீகார நடவடிக்கைகளின் முகாமைத்துவமும்**
**செயற்பாடும்**

SLAB யின் முக்கிய நடவடிக்கை ISO/IEC 17011: 2004 க்கும், சர்வதேசக் கொள்கைகளுக்கும் அமைவான வழிமுறைகள், வழிகாட்டி நெறிகள் என்பனவற்றின் அடிப்படையிலான தராதர அங்கீகாரத் திட்டங்களை நடைமுறைக் கிடுவதாகும். SLAB யினால் நடத்தப்படும் முக்கிய தராதர அங்கீகாரத் திட்டங்களின் விபரங்கள் வருமாறு:

1. ISO/IEC 17025 யின் அடிப்படையிலான பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
2. ISO 15189 அடிப்படையிலான மருத்துவ ஆய்கூடங்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
3. ISO/IEC 17021 இன் அடிப்படையிலான வழிமுறைகளுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
4. ISO/IEC வழிகாட்டி 65 அடிப்படையிலான உற்பத்திப் பொருட்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்.
5. ISO/IEC 17024 அடிப்படையிலான ஆட்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புகளுக்கான தராதர அங்கீகார திட்டம்
6. ISO/IEC 17020 அடிப்படையிலான பரிசோதனை அமைப்புக்களுக்குரிய தராதர அங்கீகாரத் திட்டம்

2013 ஆம் ஆண்டிலும் மேற்குறிப்பிட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களின் முகாமைத்துவ வழிமுறைகளை மேற்கொள்ளவும், மேம்படுத்தவும் SLAB நடவடிக்கை மேற்கொண்டது. ISO 15183 மற்றும் தரப்படுத்தல் உட்பட்ட பரிசோதனையில் APLAC / ILAC MRA யை தொடர்ந்து வைத்திருப்பதில் SLAB வெற்றி கண்டது. QMS, EMS என்பனவற்றுக்கான PAC/IAF MLA மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் வழங்கல் என்பன சம்பந்தமாக 2013 ஆம் ஆண்டில் SLAB அனுமதிக்கப்பட்டது. FSMS சான்றிதழுக்கென PAC MLA யினால் SLAB 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டது.

**பரிசோதனை ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம்**

ISO/IEC 17025:2005 அடிப்படையிலான பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கான ஆய்வுகூட தராதர அங்கீகாரம் SLAB யினால் வழங்கப்படும் தராதர அங்கீகார சேவைகளில் பெரும்பாலான இடத்தை வகிக்கிறது. தேவையற்ற தொழில்நுட்பத் தடைகளை விலக்கவும், நம்பகமான பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளவும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத் துறையினருக்கு உதவி வழங்கவுமென, பரிசோதனை ஆய்வு கூடங்களின் தராதர அங்கீகாரத்தில் 2013 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது.

இந்த வருடத்தில் பதினொரு (11) புதிய தராதர அங்கீகாரங்கள் வழங்கப்பட்டதை அடுத்து, மொத்தமாக முப்பத்து ஒன்பது (39) தராதர அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆறு (06) புதிய விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. தராதர அங்கீகாரத் திட்டத்தின் அடிப்படையில் இருபத்தியொரு (21) கண்காணிப்பு மதிப்பீடுகளும், பத்து (10) மீள் மதிப்பீடுகளும் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டன. உணவு மற்றும் விவசாயப் பொருட்கள், மண், சீமெந்து மற்றும் கொங்றீட், புடவை வகைகள், உரம், கால்நடைப் பரிசோதனை போன்ற துறைகளில் தராதர அங்கீகாரம் மேற்கொள்ளப்பட்டது.

**தரப்படுத்தல் ஆய்வு கூடங்களின் தராதர அங்கீகாரம்**

ISO/IEC 17025:2005 இன் பிரகாரம் தராதர அங்கீகாரம் பெற்ற தரப்படுத்தல் ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் குறைவாக இருந்த போதிலும், பரிசோதனை மேற்கொள்ளும் ஆய்வுகூடங்கள் நம்பகமான பெறுபேறுகளை வழங்குவதற்கும், ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவைகள், தரங்கள் என்பனவற்றைப் பரப்புவதற்குமென பலமான வளிமண்டல உட்கட்டமைப்பு தேவைப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் தராதர அங்கீகாரத் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள அதிக எண்ணிக்கையான தரப்படுத்தல் ஆய்வுகூடங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தராதர அங்கீகாரம் பெற்ற ஓத்தியல்பு மதிப்பீட்டு ஆய்வு கூடங்களின் எண்ணிக்கை நான்கு (4) ஆகும். ஒரு (1) புதிய விண்ணப்பமும் பெற்றுக்கொள்ளப்பட்டது. புதுப்பித்தலுக்கென ஒரு (1) விண்ணப்பமும், கண்காணிப்பு மதிப்பீட்டிற்கென மூன்று (3) விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்படடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தரப்படுத்தல் ஆய்வில் பொருட்களின் திண்மம், வெப்பதட்ப நிலை, நீளம், காலப் பிரமாணம், தொகை, அழுத்தம் என்பன கவனத்திற் கொள்ளப்பட்டன.

**மருத்துவ ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம்**

மருத்துவ ஆய்வுகூடங்களின் ISO 15189 அடிப்படையிலான தராதர அங்கீகாரத் திட்டம், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகள், தரங்களுக்கு உட்பட்ட வகையில், சகல மதிப்பீட்டு வழிமுறைகளுக்கும் உட்பட்டு நடைமுறைக்கிடப்பட்டது. 2013 ஆம் ஆண்டிலும் அரசாங்க மருத்துவ ஆய்வுகூடங்களில் தரமான முகாமைத்துவ வழிமுறைகளை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக காண்பிக்கப்பட்ட அக்கறை மிகவும் சொற்பமாகும்.

மருத்துவ ஆய்வுகூடச் சேவையாளரின் தகைமையை மேம்படச் செய்யவும், வழமையான பரிசோதனைகள், விசேட பரிசோதனைகள், அதியுயர் பரிசோதனைகள் ஆகிய மூன்று (3) அடிப்படைக் குழுக்களின் கீழ் மேற்குறிப்பிட்ட துறைகளிலான மருத்துவப் பரிசோதனைகளை தரப்படுத்தவும், உயிரியல், இரசாயனம், நுண்ணுயிரியல் உட்பட நான்கு துறைகளைப் பிரதிநிதித் துவப்படுத்தும் நான்கு நிபுணத்துவக் குழுக்கள், தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொண்டன.

ISO 15189 அடிப்படையில் பதின் மூன்று (13) மருத்துவ ஆய்வுகூடங்களுக்கு தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டது. இரண்டு (2) புதிய விண்ணப்பங்கள் சம்பந்தமாகவும், இரண்டு (2) மீள் புதுப்பித்தல் விண்ணப்பங்கள் பற்றியும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு (2) முன் மதிப்பீடுகள், பதினொரு (11) கண்காணிப்பு மதிப்பீடுகள், இரண்டு (2) மீள் மதிப்பீடுகள், ஒரு (1) பூர்வாங்க மதிப்பீடு என்பன மேற்கொள்ளப்பட்டன.

**சான்றிதழ் அமைப்புகளுக்கான தராதர அங்கீகாரம்**

தராதர அங்கீகார சான்றிதழ் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தில் நேரடியாக அனுசரனை வழங்குவதனால், சான்றிதழ் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரம் என்பது SLAB மிகுந்த அக்கறை செலுத்தும் மற்றுமொரு துறையாகும். ஆய்வுக்கு உட்பட்ட வருடத்தில் வழிமுறைகள், சான்றிதழ் அமைப்புக்கள் சம்பந்தமாக ISO/IEC 17021 மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் அமைப்புக்கள் சம்பந்தமாக ISO/IEC வழிகாட்டி 65, ஆட்களுக்கான சான்றிதழ் வழங்கல் ISO/IEC 17024 என்பனவற்றின் அடிப்படையில் தராதர அங்கீகாரத் திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன.

வழிமுறைகள் சான்றிதழ் அமைப்பு சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு (01) விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டு, வெளிநாட்டு சான்றிதழ் அமைப்புக்கு தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டது. மூன்று (3) கண்காணிப்பு மதிப்பீடுகளும் நடத்தப்பட்டன. சம்பந்தப்பட்ட துறைகளாவன QMS, EMS, FSMS என்பனவாகும்.

உற்பத்திப் பொருள் சான்றிதழ் சம்பந்தப்பட்ட மட்டில் ஆட்களுக்கான சான்றிதழ் வழங்கல் துறையில் ஒரு (01) கண்காணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. ஒரு (01) புதிய தராதர அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

**பரிசோதனை அமைப்புக்களின் தராதர அங்கீகாரம்**

சட்டங்களை நடைமுறைக்கிடுவதில் பலதரப்பட்ட அமைப்புக்களுக்கும் பரிசோதனை மற்றும் ஒத்தியல்பு மதிப்பீடுகளை வழங்குமென தராதர அங்கீகாரம் பெற்ற பரிசோதனை அமைப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தராதர அங்கீகாரம் பெற்ற 'CAB' க்களின் உபயோகத்தை மேம்படச் செய்வதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கமைப்பு நிறுவனங்களினால் உபயோகிக்கப்படுவதை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்கள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. பொழுதுபோக்கு பிரயாணம் சம்பந்தமான வெளிநாட்டுப் பரிசோதனை அமைப்பிற்கு ஒரு (01) தராதர அங்கீகாரம் வழங்கப்பட்து.

**சிறந்த ஆய்வுகூட வழிமுறைகளின் அங்கீகாரம்**

R & D மற்றும் பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் இருந்து அவற்றின் ஆராய்ச்சி, வழிமுறைகள் அபிவிருத்திப் பணிகளுக்கு அங்கீகாரம் பெறுவது சம்பந்தமாக கோரிக்கைகள் கிடைத்ததனால், சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் சம்பந்தமான (GLP) புதிய தராதர அங்கீகாரத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன்மூலம் R & D உட்பட ஏனைய ஆய்வுகூடங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வழிமுறைகள் என்பன சம்பந்தமான செயற்பாடுகளைத் தயாரித்து நடைமுறைக்கிட முடியும். தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (TAC) சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் (GLP) சம்பந்தமாக விசேட விடயங்களை தொடர்ந்தும் தயாரித்தது.

**திறமைப் பரிசோதனைத் திட்டங்களை ஒன்றிணைத்தல்**

மருத்துவப் பரிசோதனை, தரப்படுத்தல் உட்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களின் முக்கியமான அம்சம், திறமைப் பரிசோதனை சம்பந்தமான வெளிவாரிப் பங்களிப்பின் மூலமும், அல்லது ஆய்வு கூடங்களுக்கு இடையிலான ஒப்பீட்டுத் திட்டங்கள் மூலமும் பரிசோதனைப் பெறுபேறுகளின் தரத்திற்கு உறுதி கூறுவதாகும். பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கு உதவும் வகையில், கைத்தொழில் தொழில்நுட்பட நிலையத்தின் திறமைப் பரிசோதனைத் திட்டங்களும், இலங்கை பரிசோதனை ஆய்வுகூட சங்கத்தின் (SLATL) திறமைப் பரிசோதனைத் திட்டங்களும், இலங்கை தராதர அங்கீகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டதோடு, நீர் சிறு உயிரியல் மற்றும் மீனில் பலதரப்பட்ட இரசாயன ஆய்வுகள் போன்ற துறைகளில் திறன் பரிசோதனையும் தொடர்ந்து வழங்கப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக, அங்கத்துவ அமைப்புக்களினால் APLAC யினால் நடத்தப்பட்ட திறன் பரிசோதனைத் திட்டங்களும், மருத்துவ ஆய்வுகூடங்களுடன் இணைக்கப்பட்டன. ஒன்றிணைக்கப்பட்ட மொத்த திட்டங்களின் எண்ணிக்கை நான்கு (04) ஆகும்.

மருத்துவப் பரிசோதனை, தரப்படுத்தல் ஆகிய துறைகளில் திறன் பரிசோதனை அல்லது ஆய்வு கூடங்களுக்கு இடையிலான ஒப்பீட்டுத் திட்டங்கள் என்பனவற்றை ஒழுங்கமைப்பதில் சுகாதார அமைச்சுடனும் MUSSD யுடனும் கலந்துரையாடல்கள் முறையே மேற்கொள்ளப்பட்டன.

## 2013இல் முக்கிய செயற்பாடுகள்

2013 ஆம் ஆண்டில் SLAB அதன் ஏழு (07) வருடகால நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து கொண்டது. மேலும் அதிக எண்ணிக்கையான சம்பந்தப்பட்ட பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள், மருத்துவ ஆய்வுகூடங்கள், சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் என்பனவற்றுக்கு SLAB சர்வதேச தரங்களுக்கு அமைய அதன் சேவைகளை வழங்கியது. இந்த தராதர அங்கீகார திட்டங்கள், சர்வதேச கொள்கைகளுக்கு அமையவும், தராதர அங்கீகார அமைப்புக்களுக்கான ISO/IEC 17011 க்கு அமையவும் முகாமைத்துவப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

### SLAB யின் முகாமைத்துவ வழிமுறைகளின் அபிவிருத்தி

ஆய்வுக்குட்பட்ட வருடத்திலும் SLAB அதன் கொள்கைகள், வழிமுறைகள், வழிகாட்டி நெறிகள் என்பனவற்றை தொடர்ந்து மீளாய்வு செய்தது. மருத்துவப் பரிசோதனை, GHG சரிபார்த்தல், உணவுப் பரிசோதனை மற்றும் GLP என்பனவற்றக்கான விசேட தீர்மானங்கள் தயாரிக்கப்பட்டன. தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் நிபுணத்துவக் குழுக்கள் இந்த வருடத்தில் 12 கூட்டங்களை நடத்தின.

### தராதர அங்கீகார சேவைகள்

2013 ஆம் ஆண்டில் தராதர அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடங்களுடன் மேலும் பதினொரு (11) தராதர அங்கீகாரங்கள் சேர்க்கப்பட்டன. ஆட்கள் சான்றிதழ் மற்றும் பரிசோதனை ஆகிய துறைகளில் ஒரு (1) புதிய தராதர அங்கீகாரம், இரண்டு (2) மருத்துவ / சிகிச்சை ஆய்வு கூடங்களுக்கும் புதிதாக வழங்கப்பட்டது. ஒன்பது (09) தராதர அங்கீகாரக் குழுக்களின் கூட்டங்களும் நடைபெற்றன. இருபத்தியொரு (21) பரிசோதனை ஆய்வுகூடங்களில் கண்காணிப்புகள், பதினொரு (11) மருத்துவ ஆய்வுகூடங்கள் மூன்று (3) தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள், மூன்று (3) வழிமுறைகள் சான்றிதழ் அமைப்புக்கள், ஒரு (1) உற்பத்திப் பொருள் சான்றிதழ் அமைப்பு என்பன சம்பந்தமாகவும், தராதர அங்கீகாரமும் மேற்கொள்ளப்பட்டன. பத்து (10) மீள் மதிப்பீடுகளும் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்களில் ஒரு (1) மீள் மதிப்பீடும் இடம்பெற்றது.

ஆண்டின் இறுதியளவில் நாற்பத்து இரண்டு (42) பரிசோதனை ஆய்வுகூடங்கள் நான்கு (4) தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள், பதின் மூன்று (13) மருத்துவ ஆய்வுகூடங்கள், ஆறு (06) சான்றிதழ் அமைப்புக்கள், ஒரு (01) பரிசோதனை அமைப்பு என்பனவற்றுக்கு தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டது.

### சர்வதேச பெறுபேறுகளும் நிகழ்வுகளும்

ஆசிய பசிபிக் ஆய்வுகூட தராதர அங்கீகார கூட்டுத்தாபனத்திலும் (APLAC) சர்வதேச ஆய்வுகூட தராதர அங்கீகார கூட்டுத்தாபனத்திலும் (ILAC) பூரண அங்கத்துவ அந்தஸ்தை SLAB தொடர்ந்தும் கொண்டிருந்தது. ISO 15189 உட்பட ILAC பரிசோதனைக்கான MRA

ஒப்பமிடும் அந்தஸ்தும் தரப்படுத்தலும் தொடர்ந்து பேணப்பட்டன.

இவற்றுக்கு மேலதிகமாக, பசிபிக் தராதர அங்கீகார கூட்டுத்தாபனம் (PAC) சர்வதேச தராதர அங்கீகார கூட்டுத்தாபனம் (IAF) என்பனவற்றில் SLAB பூரண அங்கத்துவ அந்தஸ்தைப் பெற்றிருந்தது. QMS, EMS என்பனவற்றக்கான MLA ஒப்பமிடும் அந்தஸ்து, EMS மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் வழங்கல் என்பன 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. IAF இல் அங்கத்துவத்தை 2013 இல் SLAB பெற்றுக்கொண்டது.

**சக்தி வள கட்டமைப்பும் பயிற்சித் திட்டங்களும்**

தராதர அங்கீகார மதிப்பீட்டு அமைப்புக்களின் (ஆய்வுகூடங்கள் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் மற்றும் பரிசோதனை நிலையங்கள்) அதிகாரிகளினது விழிப்புணர்ச்சியையும் செயல்திறனையும் தரமுயர்த்தவென SLAB ஒழுங்கான அடிப்படையில் பயிற்சித் திட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடத்துகிறது. தராதர அங்கீகார தரங்கள் மற்றும் அவை சம்பந்தமான கொள்கைகள் என்பனவற்றுக்கு இணைந்த வகையில் தரங்கள் சம்பந்தமான தராதர அங்கீகாரத்துடன் தொடர்புபட்ட விடயங்களில் இவை இடம்பெற்றன. 2013 ஆம் ஆண்டில் ஒன்பது (09) பயிற்சி நடவடிக்கைகளும், நான்கு (04) கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன. இரண்டு (02) நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை முறையே 322, 354 ஆகும்.

SLAB மதிப்பீட்டாளர்களுக்கான 04 பயிற்சி நடவடிக்கைகளை நடத்தியது. பரிசோதனை ஆய்வுகூடங்கள், வழிமுறை சான்றிதழ் வழங்கல் அமைப்புக்கள், GHG சரிபார்தத்ல் அமைப்புக்கள் மற்றும் GLP ஆகிய துறைகளில் இவை அமைந்திருந்தன. 110 அதிகாரிகள் இதில் பங்குபற்றினர்.

**அகில இலங்கை பாடசாலை ஆய்வுகூடப் போட்டி**

2013 ஆம் ஆண்டில் ‘வித்யா பிரபா’ என்ற அகில இலங்கை பாடசாலை ஆய்வுகூடப் போட்டியை SLAB அறிமுகம் செய்திருந்தது. பாடசாலைகளிலுள்ள உயிரியல் இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் ஆய்வுகூடங்கள் என்பனவற்றை இது உள்ளடக்கியது. பாடசாலை ஆய்வுகூடப் போட்டி அகில இலங்கை ரீதியில் அறிமுகம் செய்யப்பட்டது. அரச பாடசாலைகளில் உள்ள உயர்தர வகுப்பு விஞ்ஞான ஆய்வுகூடங்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றின. கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு என்பனவற்றின் அனுசரணையுடன் இந்தப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

இந்தத் திட்டத்தின் நோக்கம் நாளாந்த கல்வி நடவடிக்கைகளில் சிறந்த விஞ்ஞான ஆய்வுகூட வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவென, பாடசாலை ஆய்வுகூடங்களைத் தரமுயர்த்துவதாகும். மாணவர்கள் பாடசாலைகளை விட்டு விலகும் போது, அடிப்படை அறிவையும், சிறந்த ஆய்வுகூட வழிமுறைகளையும் அவர்கள் அறிந்திருப்பதை நிச்சயிப்பதே இதன் நோக்கமாகும். 2013 ஜுன் மாதத்தில் இந்தப் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான விசேட விடயங்கள் அனைத்தும் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவினால் தயாரிக்கப்பட்டன.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நாட்டின் சகல பகுதிகளிலும் மாவட்ட அடிப்படையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான விழிப்புணர்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. 5000 க்கும் அதிகமானோர் இதில் பங்குபற்றினார்கள். இந்தப் போட்டிக்கென நூற்றுக்கும் அதிகமான மதிப்பீட்டாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

போட்டிக்கான விண்ணப்பங்கள் 2013 நவம்பர் மாத்தில் கோரப்பட்டன. நேரடி மதிப்பீடுகள் 2014 ஆம் ஆண்டில் நடைபெற இருக்கின்றன. தேசிய, மாகாண, வலய மட்டத்தில் வெற்றியாளர்கள் 2014 ஜுன் மாதத்தில் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர்.

**நிதித்துறை முக்கிய அம்சங்கள் 2013**

மீள் செலவினத்திற்கான, வருடாந்த வரவு செலவுத் திட்டத் தொகை ரூபா 33.0 மில்லியன் ஆகும். இதற்கான திறைசேரி பங்களிப்பு ரூபா 20.0 மில்லியனாக இருந்த போதிலும், ரூபா 14.8 மில்லியனே மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டது. இடைப்பட்ட தொகை, பெறப்பட்ட வருமானத்தின் மூலம் ஈடு செய்யப்பட்டது.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில், தராதர அங்கீகாரச் சேவைகள் மூலமும், பயிற்சித் திட்டங்கள் மூலமும் பெறப்பட்ட வருமானம் ரூபா 8 மில்லியன். மீள் செலவினத்தின் மேலான வருமானம் 49.4% ஆகும்.

மூலதனச் செலவினத்திற்கான திறைசேரியின் வருடாந்த ஒதுக்கீடு ரூபா 2.0 மில்லியன். இதில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை ரூபா 1.5 மில்லியன் ஆகும்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் SLAB யின் நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட செலவினத்தின் மேலான வருமானம் ரூபா 0.6 மில்லியன் ஆகும்.

**கடந்த ஆறு வருடங்களுக்கான நிதித்துறைத் தகவல்கள்**

| வருடம் | மீள் செலவினம் (ரூபா மில்லியன்) | | | | மூலதனச் செலவினம் (ரூபா மில்லியன்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வரவு செலவுத் திட்டம் | உண்மைச் செலவு | பெறப்பட்ட திறைசேரி | சம்பாத் தியம் | வரவு செலவுத் திட்டம் | உண்மைச் செலவு | பெறப்பட்ட திறைசேரி |
| 2007 | 14.70 | 11.50 | 8.23 | 2.83 | 1.50 | 1.40 | 1.50 |
| 2008 | 17.29 | 13.98 | 10.56 | 3.27 | 2.74 | 0.41 | 0.50 |
| 2009 | 19.60 | 15.01 | 11.47 | 3.32 | 2.33 | 0.44 | 0.66 |
| 2010 | 21.81 | 15.51 | 8.91 | 5.30 | 3.57 | 0.63 | 0.50 |
| 2011 | 23.30 | 21.33 | 13.28 | 8.12 | 3.08 | 0.63 | 0.80 |
| 2012 | 28.18 | 29.29 | 15.50 | 12.9 | 1.82 | 1.75 | 1.37 |
| 2013 | 33.00 | 36.61 | 14.80 | 18.08 | 2.00 | 1.51 | 1.50 |

*மொத்த மீள் செலவினத்தில், தேய்மானம், பணிக்கொடை ஏற்பாடு, ஏனைய ஏற்பாடுகள் என்பனவும் அடங்கும்.

## இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை
## 31 டிசம்பர் 2013 இல் உள்ளவாறான இறுதி ஐந்தொகை

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | ரூபா | ரூபா |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | **20** | 1,739,535.02 | 1,152,711.04 |
| பதிவேட்டுப் பொருட்கள் | | 102,080.90 | 38,802.20 |
| பெறுகைககள் | **11** | 1,845,361.59 | 1,725,528.74 |
| முற்பணங்கள் | **18** | 529,179.69 | 292,038.22 |
| இடர் கடன் | **17** | 648,300.00 | 585,000.00 |
| மீளப் பெறப்பட்ட வைப்புக்களும் முற்பணங்களும் | **10** | 1,232,200.00 | 1,266,000.00 |
| அகற்றப்பட்ட சொத்துக்கள் | **24** | - | 12.00 |
| | | 6,096,657.20 | 5,060,092.20 |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும் | **26** | 12,473,778.32 | 14,783,588.59 |
| **அருவச் சொத்துக்கள்** | | | |
| ஆய்வாளர் சொத்துக்கள் | **19** | 1,995,707.38 | 2,410,239.77 |
| மூதலீடுகள் | | 700,000.00 | - |
| | | 15,169,485.70 | 17,193,828.36 |
| **மொத்த சொத்துக்கள்** | | **21,266,142.90** | **22,253,920.56** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடனாளிகள் | | 14,340.00 | 4,728.00 |
| திரண்ட மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | **14** | 1,105,251.62 | 1,258,430.40 |

| | | | |
|---|---|---|---|
| பெறப்பட்ட முற்பணம் | **16** | 1,221,714.04 | 3,753.13 |
| | | **2,341,305.66** | **1,266,911.53** |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடை ஏற்பாடு | **22** | 1,213,110.90 | 687,354.61 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **3,554,416.56** | **1,954,266.14** |
| **நிகர சொத்துக்கள்** | | **17,711,726.34** | **20,299,654.42** |
| **நிகர சொத்துக்கள் / ஒப்புரவு** | | | |
| திரட்டிய நிதியம் | **12** | 5,215,326.13 | 4,908,178.86 |
| வேறுபட்ட வருமானம் - அரச மானியம் | **13** | 10,681,800.21 | 13,576,875.56 |
| ஏனைய மானியங்கள் | **21** | 1,814,600.00 | 1,814,600.00 |
| **நிகர சொத்துக்கள் / ஒப்புரவு** | | **17,711,726.34** | **20,299,654.42** |

பக்கங்களான 5 முதல் 8 வரை கணக்கியல் கொள்கைகள் மற்றும் பக்கங்களான 9 முதல் 13 வரை குறிப்புகளை உள்ளடக்கியவாறு முழுமையான கணக்கறிக்கை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலின் பொறுப்பு கட்டுப்பாட்டுச் சபையைச் சார்ந்ததாகும். இந்த நிதி அறிக்கையானது, சபையின் கட்டுப்பாட்டுச் சபைக்குப் பதிலாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

ஹிரன்சா களுதந்திரி
சபை அங்கத்தவர்
பொதுத் திறைசேரியின் பிரதிநிதி

அசித்த கே. சேனவிரத்ன
சபை அங்கத்தவர்
கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி

தலைவர்
ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான
இலங்கைத் தராதர அங்கீகாரச் சபை

பிரதிப் பணிப்பாளர் (நிதி நிர்வாகம்)
ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான
இலங்கைத் தராதர அங்கீகாரச் சபை

**இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை**
**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான அறிக்கை**

| | குறிப்புகள் | 2013 இல் உள்ளவாறான ரூபா | 2012 இல் உள்ளவாறான ரூபா | வரவு செலவு 2013 ரூபா |
|---|---|---|---|---|
| **வருமானம்** | 1 | **36,672,027.82** | **30,409,910.63** | **33,000,000.00** |
| | | **36,672,027.82** | **30,409,910.63** | **33,000,000.00** |
| **நிருவாக மற்றும் நிறுவகச் செலவுகள்** | | | | |
| ஊழியர் சம்பளம் | **2** | 9,823,799.18 | 8,141,321.70 | 11,018,900.00 |
| ஒப்பந்தச் சேவைகள் | **6** | 14,026,427.02 | 11,221,189.74 | 12,739,300.00 |
| விநியோகம் | **4** | 1,054,580.90 | 814,263.65 | 1,274,000.00 |
| பங்களிப்பு மற்றும் அங்கத்தவர் கட்டணம் | **7** | 1,184,318.68 | 1,254,210.90 | 1,441,000.00 |
| போக்குவரத்துச் செலவு | **3** | 3,174,757.41 | 3,492,798.71 | 3,100,000.00 |
| பராமரிப்புச் செலவு | **5** | 1,970,607.00 | 1,400,034.75 | 1,500,800.00 |
| ஏனையவைகள் | **8** | 5,363,725.11 | 2,941,824.29 | 908,000.00 |
| நிதிச் செலவுகளும் ஏனையவைகளும் | **9** | 14,180.00 | 28,648.00 | 18,000.00 |
| ஐயக் கடன்களுக்கான ஒதுக்கம் | | - | - | 1,000,000.00 |
| **மொத்தச் செலவுகள்** | | **36,612,395.30** | **29,294,291.74** | **33,000,000.00** |
| **வருமானத்தை மிஞ்சிய செலவுகள்** | | **59,632.52** | **1,115,618.89** | **-** |

## இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை
## 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான மூலதன மாற்றம் பற்றிய அறிக்கை

| | வேறுபட்ட வருமானம் ரூபா | ஏனைய மானியங்கள் ரூபா | ஒதுக்கிய நிதி ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| 2012 ஜனவரில் 01 இல் மீதி | 4,118,898.63 | 1,814,600.00 | 3,754,994.11 | 9,688,492.74 |
| முந்திய வருட சீராக்கம் | - | | 37,565.86 | 37,565.86 |
| 2012 ஜனவரி 01 பொருந்திய மீதி | 4,118,898.63 | 1,814,600.00 | 3,792,559.97 | 9,726,058.60 |
| வரவுகள் மற்றும் மூலதனத்துடன் சேர்க்கப்பட்டவை | 11,870,000.00 | | - | 11,870,000.00 |
| வருடத்திற்கான தேய்மானம் | (2,275,628.46) | | - | (2,275,628.46) |
| பணிக்கொடை ஒதுக்கம் | (136,394.61) | | - | (136,394.61) |
| வருடத்திற்கான அதிகரிப்பு/(குறைவு) | | | 1,115,618.89 | 1,115,618.89 |
| 2012 டிசம்பர் 31 இல் மீதி | **13,576,875.56** | **1,814,600.00** | **4,908,178.86** | **20,299,654.42** |
| 2013 ஜனவரி 01 இல் மீதி | 13,576,875.56 | 1,814,600.00 | 4,908,178.86 | 20,299,654.42 |
| முந்திய வருட சீராக்கம் | | | 3,753.13 | 3,753.13 |
| நிலையான சொத்துக்கள் சீராக்கம் | | | 1.00 | 1.00 |
| முற்பணக் கொடுப்பனவு சீராக்கம் | | | 245,455.50 | 245,455.50 |
| வரி சீராக்கம் | | | (1,694.88) | (1,694.88) |
| 2013 ஜனவரி 01 இல் மீளமைப்பு மீதி | 13,576,875.56 | 1,814,600.00 | 5,155,693.61 | 20,547,169.17 |
| கிடைத்த மானியங்களும் மூலதனச் சொத்துக்களும் | 1,500,000.00 | | - | 1,500,000.00 |
| வருடத்திற்கான தேய்மானம் | (3,773,842.96) | | - | (3,773,842.96) |
| SLAB IT திட்டத்தின் மொத்த கழித்த தொகை | (343,560.00) | | - | (343,560.00) |
| தேர்ச்சி பரிசோதனை திட்டத்தின் கழித்த தொகை | (277,672.39) | | - | (277,672.39) |
| வருடத்திற்கான அதிகரிப்பு/(குறைவு) | | | 59,632.52 | 59,632.52 |
| 3012 டிசம்பர் 31 இல் மீதி | **10,681,800.21** | **1,814,600.00** | **5,215,326.13** | **17,711,726.34** |

## இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை
## 31.12.2013 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் அறிக்கை

| விபரங்கள் | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|
| வருடத்திற்கான தேறிய இலாபம் | 59,632.52 | 1,115,618.89 |
| **சீராக்கல்** | | |
| மூலதன மானியம் தவணை அடிப்படையில் தீர்ப்பு | (4,395,075.35) | - |
| நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம் | 3,773,842.96 | 2,275,628.46 |
| அகற்றப்பட்ட சொத்துக்கள் மீதான இலாபம் | (1,088.00) | (17,499.00) |
| பணிக்கொடை ஏற்பாடு | 525,756.29 | 136,394.61 |
| SLAB IT திட்ட தவணை அடிப்படைத் தீர்வு | 343,560.00 | - |
| திறமைச் சோதனை தவணை அடிப்படையில் தீர்வு | 277,672.39 | - |
| திரட்டிய செலவினங்கள் குறைத்த/அதிகப்படியான ஏற்பாடுகள் | - | (33,169.46) |
| **செயற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னரான நடைமுறை மேலதிகம்** | **584,300.81** | **3,476,973.50** |
| **செயற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| முற்கொடுப்பனவுகள் (குறைவு)/அதிகரிப்பு | (237,141.47) | (202,982.42) |
| பெறுகைகளில் (குறைவு)/அதிகரிப்பு | (119,832.85) | (1,039,378.09) |
| இடர் கடன்களில் (குறைவு)/அதிகரிப்பு | (63,300.00) | (267,900.00) |
| முற்பணப் பெறுகையில் (குறைவு)/அதிகரிப்பு | 1,217,960.91 | - |
| மீள் வழங்கல் வைப்பில் (குறைவு)/அதிகரிப்பு | 800.00 | (243,000.00) |
| கடனாளிகள் (குறைவு)/அதிகரிப்பு | 9,612.00 | (18,149.93) |
| திரட்டிய செலவினம் (குறைவு)/அதிகரிப்பு | (427,076.58) | 158,460.43 |
| கையிருப்பு மற்றும் ஏனையவை (குறைவு)/அதிகரிப்பு | (63,278.70) | 21,646.65 |
| வர்த்தக அடையாளம் (குறைவு)/அதிகரிப்பு | - | (3,360.00) |
| அகற்றல் சொத்துக்களில் (குறைவு)/அதிகரிப்பு | 12.00 | - |
| ஏனைய கொடுப்பனவுகள் (குறைவு)/அதிகரிப்பு | 273,897.80 | - |
| **செயற்படு நடவடிக்கைகளில் இருந்து நிகர சாப்பு பாய்ச்சல்** | **1,175,953.92** | **1,882,310.14** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| நிலையான சொத்துக்கள் சுவீகரிப்பு | (1,464,031.69) | (11,850,377.37) |
| அபிவிருத்தி நடவடிக்கைகள் திறமைப் பரிசோதனை | (41,700.00) | (254,895.23) |
| பின்தள்ளிய வருமானம் - பெறப்பட்ட அரச மானியம் | - | 9,457,976.93 |
| பணிக்கொடைக்கான முதலீடு | (700,000.00) | 86,502.70 |
| அகற்றல் சொத்துக்களின் விற்பனை பெறுமதி | 1,100.00 | - |
| கணக்கியல் பொதியில் முதலீடு | (132,000.00) | (33,000.00) |
| சொத்துக்களின் அகற்றல் | (12.00) | - |
| முந்திய ஆண்டின் சீராக்கல்கள் | 247,513.75 | 37,565.86 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் உபயோகிக்கப்பட்ட தேறிய நிதி** | **(2,089,129.94)** | **(2,556,227.11)** |
| **நிதித்துறை நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| பெறப்பட்ட அரச மானியம் | 1,500,000.00 | **-** |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | **1,500,000.00** | |
| காசும் காசுக்குச் சமமானவையும் தேறிய அதிகரிப்பு / குறைவு | 586,823.98 | (673,916.97) |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | 1,152,711.04 | 1,826,628.01 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் | 1,739,535.02 | 1,152,711.04 |

# இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

**நிதிசார் அறிக்கைக்கான குறிப்புக்கள்**

## 1.1 முக்கியமான கணக்கியற் கொள்கைகள்

### பொது

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB) 2005 இல் 32 ஆம் இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தேசிய தராதர அங்கீகார அதிகார சபையாகும்.

### 1.2 கணக்கியல் கொள்கைகளும் அவற்றின் தயாரிப்பிற்கான அடிப்படையும்

நிதித்துறை அறிக்கைகள் அனைத்தும் 2012 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட SLFRS க்கு உட்பட்ட வகையில் விலைமதிப்பீட்டு வழிமுறையை உபயோகித்து தயாரிக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கை பொது நிறுவன திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2013/03 இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் இலங்கை அரசதுறை கணக்கியல் தரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.2.1 இலங்கை கணக்கியல் தரங்கள் (SLFRS 1)

2013 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதி அறிக்கைகள் இலங்கை அரசதுறை கணக்கியல் தரங்களுக்கு உட்பட்ட வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1.3 சொத்துக்களும் - அவற்றின் மதிப்பீட்டிற்கான அடிப்படை அம்சங்களும்

ஐந்தொகை தினத்திலன்று, நடைமுறைச் சொத்துக்கள் என இனங்காணப்பட்டுள்ளவை, வங்கி நிலுவைகளும், வழமையான நடவடிக்கைக் காலத்தில் அல்லது ஐந்தொகை தினத்திலிருந்து 1 வருடம் இவற்றில் எது குறுகியகாலமோ அதில் ரொக்கப்பணமாக மாற்றக்கூடியவை எனக் கருதப்படுபவையுமாகும். நடைமுறைச் சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் எனப்படுபவை, ஐந்தொகை திகதியில் இருந்து ஒரு வருட காலத்துக்கு அப்பாலும் வைத்திருக்க சபை விரும்பும் நடைமுறையற்ற சொத்துக்களாகும்.

அபிவிருத்தி நடவடிக்கைகள் என்ற தலைப்பின் கீழ் காண்பிக்கப்பட்ட திறன்மதிப்பீட்டுத் திட்டத்திற்கான செலவினங்களில் 50% தொகை தவணை அடிப்படையில் தீர்க்கப்பட்டதோடு எஞ்சியுள்ள தொகை அடுத்த வருட ஆரம்பத்திற்கெனக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

### 1.3.1 ஆதனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள்

ஆதனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன வரலாற்று ரீதியான கொள்விலையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. சொத்துக்களின் பெறுமானத்தை அவற்றின் மதிப்பீட்டு பயனுள்ள காலத்தில் பதிவழிக்கவென ஆண்டொன்றுக்கு பின்வரும் வீதத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானம் வழங்கப்பட்டுள்ளது.

| சொத்துக்கள் | விகிதம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| மரத்தளபாடங்கள் | 20% |
| அலுவலக உபகரணங்கள், குளிரூட்டி இயந்திரங்கள், தொலைபேசி - தொலைநகல் இயந்திரங்கள் | 20% |
| கணனி, பிரின்டர், புறொஜெக்டர், போட்டோ பிரதி இயந்திரங்கள். | 25% |
| கட்டடங்களும் அமைப்புக்களும் | 33.33% |

ஒரு சொத்தின் பாவனை ஆரம்பிக்கப்படும் போது, அதன் தேய்மானமும் ஆரம்பிக்கிறது. அது விற்பனை செய்யும் மாதத்துடன் தேய்மானம் முடிவடைகிறது.

### 1.3.2 அருவச்சொத்துக்கள்

SLAB யின் இணையத்தளம், மென்பொருள், தகவல் தொழில்நுட்ப வழிமுறை என்பனவற்றிற்கான நிதி இலங்கையில் தரமான உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான மானியமான சுவீடிஷ் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டம் 2010 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டது. இதற்கான மூலதனச் செலவினம் நடைமுறையற்ற சொத்தாகக் கருதப்பட்டு 2013 ஆம் ஆண்டில் இருந்து ஐந்து வருட காலத்தில் பதிவழிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

### 1.4 பதிவேட்டுப் பொருட்கள்

பதிவேட்டுப் பொருட்கள் இல்லை என்பதுடன், ஆகக்குறைந்த கொள்விலையில் அல்லது பெறத்தக்க தேறிய பெறுமதியில் பதிவேட்டுப் பொருட்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ளது.

### 1.5 பெறுகைகள்

பெறுமதி கிடைக்குமென மதிப்பிடப்படும் தொகையில், பெறுகைகள் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.5 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 1.5.1 நடைமுறைப் பொறுப்புக்கள்

கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகைத் திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் கொடுப்பனவுக்குரியனவையே நடைமுறைப் பொறுப்புக்களாகும். நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படும் போது, அறிந்துகொள்ளப்பட்ட சகல பொறுப்புக்களும் கணக்கிடப்பட்டுள்ளன.

### 1.6 வருமானமும் செலவினமும்

### 1.6.1 வருமான அங்கீகாரம்

பயிற்சித்திட்டங்கள், ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம் என்பனவற்றின் மூலம் பெறப்பட்ட வருமானம், அவை ஏற்பட்ட திரட்டிய அடிப்படையிலேயே கணக்கிடப்பட்டுள்ளன. மானியங்கள் பெறுகை அடிப்படையிலேயே வருமான அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.6.2 திறைசேரி மானியங்கள்

திறைசேரியில் இருந்து பெறப்பட்ட மானியங்கள், அவை பெற்றுக்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வருமானமாகக் கணிக்கப்பட்டுள்ளன. சொத்துக்களைக் கொள்வனவு செய்யவென உபயோகிக்கப்பட்ட மூலதன மானியங்கள் தாமதித்த வருமானமாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.6.3 செலவின அங்கீகாரம்

சபையை நிர்வகிப்பதிலும், சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்களைத் திறமையான நிலையில் பராமரிப்பதிலும் ஏற்பட்ட சகல செலவினங்களும் வருமான அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.6.4

2012 ஆம் ஆண்டில் சர்வதேச தராதர அங்கீகார அங்கத்துவத்தைப் பெறவென சர்வதேச தராதர அங்கீகார மன்றத்திற்கு 1674 டொலர்கள் செலுத்தப்பட்டன. இந்தக் கட்டணத்தில் 1293 டொலரை 2014 ஆம் ஆண்டுக்கான அங்கத்துவக் கட்டணமாக கருதப்படுவதற்கும் எஞ்சியுள்ள 381 டொலர்களை 2015 ஆம் ஆண்டுக்கு கொண்டு செல்வதற்கும் சர்வதேச தராதர அங்கீகார மன்றம் தீர்மானித்துள்ளது.

## 1.7 வரி விதிப்பு

வருமான வரி சம்பந்தமாக எந்தவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

## 1.8 ஐந்தொகைத் திகதியின் பின்னரான நடவடிக்கைகள்

நிதி அறிக்கையில் தெரிவிக்கப்படுவதற்கு அல்லது சீராக்கல் செய்யப்படுவதற்கு அவசியமான எத்தகைய நடவடிக்கையும் ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம்பெறவில்லை.

## 1.9 ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள்

ஆய்வுக்குட்பட்ட வருடத்திற்குப் பொருந்தும் வகையில், ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் தேவைக்கு ஏற்ற வகையில் மீளமைக்கப்பட்டுள்ளன.

## 1.10 காசுப்பாய்ச்சல் அறிக்கை

நேரடியற்ற வழிமுறையை உபயோகித்து காசுப்பாய்ச்சல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பனவற்றின் கொள்வனவோடு தொடர்புபட்ட வகையில் பெறப்பட்ட அரச மானியங்கள் முதலீடுகளுக்கான காசுப் பாய்ச்சலாகத் தரப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.11 வெளிநாட்டு நாணயமாற்று வீத மாற்றங்களின் தாக்கங்கள்

வெளிநாட்டு சம்பாத்திய வைப்புக்கள் சம்பந்தமாக இலங்கை வங்கியில் வெளிநாட்டு நாணயமாற்று சம்பாத்தியக் கணக்கொன்று (FEEA) திறக்கப்பட்டுள்ளது. இதற்கான வருமானங்களைச் சேகரிப்பதற்கென ஒப்படைப்புக் கணக்குப் படிவம் அனுப்பப்பட்டுள்ளது. காசுப் பாய்ச்சல் தேவைகளின் அடிப்படையில் இந்த வைப்புப்பணங்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றன.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் இடம்பெற்ற கீழ்க்காணும் நடவடிக்கைகளின் நாணயமாற்று விகிதத்தின் தாக்கம் கணக்குகள் தயாரிக்கப்படும் போது கருத்திற் கொள்ளப்படவில்லை.

| **திகதி** | **நடவடிக்கையின் விபரம்** | **நாணயப் பெறுமதி** |
|---|---|---|
| 2013.04.23 | மதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டச் செலவின மீள் கொடுப்பனவு | 6,304.00 யூரோ |
| 2013.06.19 | விமானப் பயணச்சீட்டுக் கட்டணங்களின் மீள் கொடுப்பனவு | US $ 717.66 |
| 2013.07.30 | பூர்வாங்க மதிப்பீட்டின் தராதர அங்கீகாரத்திற்கான ஒப்படைப்புக் கணக்குப் படிவம் - I M வெரிட்டாஸ் தனியார் நிறுவனம் | US $ 3,632.65 |
| 2013.09.11 | தராதர அங்கீகாரத்திற்கான விண்ணப்பக் கட்டணங்களின் ஒப்படைப்புக் கணக்குப் படிவம் - AUT Lamp சோதனை ஆய்வுகூடம் | US $ 313.01 |
| 2013.12.03 | தராதர அங்கீகாரத்திற்கான விண்ணப்பக் கட்டணங்களின் ஒப்படைப்புக் கணக்குப் படிவம் - இன்டர்நஷனல் தர மற்றும் பாதுகாப்பு நிறுவனம் | US $ 102.04 |

வெளிநாட்டு நாணயமாற்று வீத மாற்றங்களின் தாக்கங்கள் 2014 ஆம் ஆண்டில் இருந்து கருத்திற் கொள்ளப்படும்.

## இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை
## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | 2013 இல் உள்ளவாறான | 2012 இல் உள்ளவாறான | 2013 இல் நிலைமை |
|---|---|---|---|---|
| **1)** | **வருமானம்** | ரூபா | ரூபா | ரூபா |
| | பெறப்பட்ட திறைசேரி மானியம் (குறிப்பு 14) | 19,198,075.35 | 17,922,023.07 | 20,000,000.00 |
| | | | | |
| | **தராதர அங்கீகார வருமானம்** | | | |
| | தராதர அங்கீகார வருமானம் - பரிசோதனைகள் | 5,858,258.38 | 6,705,992.00 | 4,500,000.00 |
| | தராதர அங்கீகார வருமானம் - தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள் | 549,600.00 | - | 500,000.00 |
| | தராதர அங்கீகார வருமானம் - மருத்துவ ஆய்வுகூடங்கள் | 3,713,720.00 | 2,524,400.00 | 2,500,000.00 |
| | தராதர அங்கீகார வருமானம் - சான்றிதழ் அமைப்புக்கள் | 2,700,446.48 | 1,280,248.05 | 2,000,000.00 |
| | தராதர அங்கீகார வருமானம் - பரிசோதனை அமைப்புக்கள் | 938,766.59 | 351,764.72 | 500,000.00 |
| | | | | |
| | **பயிற்சித் திட்ட வருமானம்** | | | |
| | பயிற்சித் திட்ட வருமானம் - மதிப்பீட்டாளர் | 2,507,353.00 | - | 3,000,000.00 |
| | பயிற்சித் திட்ட வருமானம் - ஏனையவை | 1,814,750.00 | 2,008,965.14 | |
| | | | | |
| | **ஏனைய வருமானங்கள்** | | | |
| | இடர் கடன் வட்டி | 19,220.33 | 30,827.66 | - |
| | நானாவித வருமானம் - ஏனையவை | 40,137.63 | 841.00 | - |
| | WAD நடவடிக்கைகள் அதிகரிப்பு (குறைவு) (குறிப்பு 23) | (750,979.75) | (874,456.61) | - |
| | திரண்ட செலவினங்கள் அதிகரிப்பு/குறைவு ஏற்பாடு | - | 33,169.46 | - |
| | SAARC PTB பயிற்சித் திட்டம் | - | 408,637.14 | - |
| | நிலையான சொத்துக்கள் அகற்றல் | 1,088.00 | 17,499.00 | - |
| | IFRS சீராக்கல் - கடன் தொகை வட்டி | 81,591.81 | - | - |
| | மொத்த வருமானம் | **36,672,027.82** | **30,409,910.63** | **33,000,000.00** |

குறிப்பு: நாணயமாற்று நடவடிக்கைகள் மூலமான வருமானம்

சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கிளன் தராதர அங்கீகாரத்தின் மூலம் ரூபா 473,182.66 மற்றும் (US $ 3,632.65 ) டொலர்களும் பரிசோதனை ஆய்வுகூடங்கள் தராதர அங்கீகாரத்தின் மூலம் ரூபா 40,585.00 மற்றும் US $ 313.01 டொலர்களும் பரிசோதனை அமைப்புக்களின் தராதர அங்கீகாரத்தின் மூலம் பெறப்பட்ட ரூபா 12,925.00 மற்றும் (US $ 102.04) (102.04) டொலர்களும் மேற்குறிப்பிட்ட வருமானத்தில் இடம்பெற்றுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| **2)** | **ஆளணி ஊதியங்கள்** | | | |
| | சம்பளங்களும் கொடுப்பனவுகளும் | 4,551,850.00 | 4,135,176.67 | 5,702,700.00 |
| | ஊ.சே.நி | 961,339.77 | 833,170.51 | 1,197,400.00 |
| | ஊ.ந.நி | 192,268.04 | 164,335.28 | 239,500.00 |
| | அலவன்சுகள் (வாழ்க்கைச் செலவு) | 2,528,080.64 | 2,083,938.50 | 2,898,700.00 |
| | மேலதிக வேலைநேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள் | 269,092.34 | 214,275.83 | 240,000.00 |
| | பணிக்கொடை செலவினம் | 525,756.29 | 136,394.61 | - |
| | விடுப்புக் கொடுப்பனவு | 447,090.60 | 378,936.30 | 440,600.00 |
| | முன்னேற்றத்திற்கான வருடாந்த ஊக்கத் தொகை | 114,000.00 | - | - |
| | ஊழியர் பயிற்சியும் அபிவிருத்தியும் | 154,186.00 | 128,840.00 | 240,000.00 |
| | ஊழியர் நலன்புரித் திட்டம் | 80,135.50 | 66,254.00 | 60,000.00 |
| | | **9,823,799.18** | **8,141,321.70** | **11,018,900.00** |
| **3)** | **பிரயாணச் செலவினங்கள்** | | | |
| | உள்நாடு | 67,806.70 | 85,610.20 | 100,000.00 |
| | வெளிநாடு | 3,106,950.71 | 3,407,188.51 | 3,000,000.00 |
| | | **3,174,757.41** | **3,492,798.71** | **3,100,000.00** |
| **4)** | **விநியோகம்** | | | |
| | எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும் | 257,570.90 | 269,908.65 | 300,000.00 |
| | எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் | 797,010.00 | 521,535.00 | 969,000.00 |
| | ஏனையவை | - | 22,820.00 | 5,000.00 |
| | | **1,054,580.90** | **814,263.65** | **1,274,000.00** |
| **5)** | **பராமரிப்புச் செலவினம்** | | | |
| | பராமரிப்பு – வாகனங்கள் | 492,390.08 | 161,069.74 | 450,000.00 |
| | பராமரிப்பு - இயந்திரங்கள் உபகரணங்கள் | 1,047,952.12 | 1,022,706.01 | 708,800.00 |
| | பராமரிப்பு - கட்டடங்கள் ஏனைய அமைப்புக்கள் | 185,584.80 | 5,555.00 | 100,000.00 |
| | பராமரிப்பு - சுத்திகரிப்பு பொருட்கள் | - | 710.00 | - |
| | பராமரிப்பு - நிர்வாகம் | 23,460.00 | 43,824.00 | 20,000.00 |
| | பராமரிப்பு - சுத்திகரிப்பு சேவைகள் | 221,220.00 | 166,170.00 | 222,000.00 |
| | | **1,970,607.00** | **1,400,034.75** | **1,500,800.00** |
| **6)** | **பராமரிப்பு ஒப்பந்தச் சேவைகள்** | | | |
| | பராமரிப்பு - போக்குவரத்து மற்றும் வாடகைக் கட்டணங்கள் | 460,159.30 | 1,030,010.00 | 240,000.00 |
| | பராமரிப்பு - தொலைத்தொடர்பு | 399,026.20 | 385,012.54 | 400,000.00 |
| | பராமரிப்பு - தபால் கட்டணங்கள் | 320,955.00 | 234,249.50 | 250,000.00 |
| | பராமரிப்பு - ஏனைய தராதர அங்கீகார செலவினங்கள் | 57,392.00 | - | 56,000.00 |
| | PAC பராமரிப்பு - மதிப்பீட்டுச் செலவினங்கள் | 1,355,116.31 | - | 1,200,000.00 |
| | மின்சாரம் | 664,745.72 | 576,466.35 | 700,000.00 |
| | தண்ணீர் | 59,408.20 | 30,562.40 | 65,000.00 |
| | வாடகையும் உள்ளூர் வரிகளும் | 3,672,000.00 | 3,128,000.00 | 3,672,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டட வாடகை UDA கட்டணம் | - | - | - |
| | சபை அங்கத்தவர் கொடுப்பனவு | 464,843.00 | 365,330.50 | 500,000.00 |
| | பாதுகாப்புச் செலவினம் | 335,045.00 | 335,988.00 | 348,000.00 |
| | தொழில்நுட்ப ஆலோசனைக் குழு செலவினம் | 439,146.58 | 532,809.00 | 600,000.00 |
| | கணக்காய்வுக் கட்டணம் | 80,000.00 | 80,000.00 | 200,000.00 |
| | விளம்பரமும் செய்திப் பத்திரிகைகளும் | 225,685.00 | 279,745.50 | 800,000.00 |
| | அச்சு நடவடிக்கைகள் | 167,817.55 | 113,970.50 | - |
| | **பயிற்சித் திட்டச் செலவினங்கள்** | | | |
| | பயிற்சித் திட்டச் செலவினம் - மதிப்பீட்டாளர் பயிற்சி | 1,389,389.12 | 1,007,594.10 | 555,400.00 |
| | பயிற்சித் திட்டச் செலவினம் - ஏனைய பயிற்சிகள் | 746,084.50 | - | 500,000.00 |
| | **மதிப்பீட்டுச் செலவினங்கள்** | | | |
| | மதிப்பீட்டுச் செலவினங்கள் - பரிசோதனை | 1,293,958.72 | 3,121,451.35 | 662,900.00 |
| | மதிப்பீட்டுச் செலவினங்கள் - தரப்படுத்தல் | 358,078.51 | - | 400,000.00 |
| | மதிப்பீட்டுச் செலவினங்கள் - மருத்துவம் | 940,058.43 | - | 320,000.00 |
| | மதிப்பீட்டுச் செலவினங்கள் - சான்றிதழ் | 338,123.90 | - | 170,000.00 |
| | மதிப்பீட்டுச் செலவினங்கள் - பரிசோதனை அமைப்புக்கள் | 259,393.98 | - | 300,000.00 |
| | உலக தராதர அங்கீகார தினம் செலவினம் (குறிப்பு இல.23) | - | - | 800,000.00 |
| | | **14,026,427.02** | **11,221,189.74** | **12,739,300.00** |
| **7)** | **சந்தா மற்றும் அங்கத்தவர் கட்டணம்** | | | |
| | சர்வதேச ஆய்வுகூட தராதர அங்கீகார கூட்டுத்தாபனம் | 269,404.13 | 256,793.37 | 275,000.00 |
| | ஆசிய பசிபிக் தராதர ஆய்வுகூட தராதர அங்கீகாரக் கூட்டுத்தாபனம் | 481,036.75 | 411,853.00 | 482,000.00 |
| | பசிபிக் தராதர அங்கீகார கூட்டுத்தாபனம் | 433,877.80 | 340,109.03 | 434,000.00 |
| | சர்வதேச தராதர அங்கீககார மன்றம் | - | 245,455.50 | 250,000.00 |
| | | **1,184,318.68** | **1,254,210.90** | **1,441,000.00** |
| **8)** | **ஏனையவை** | | | |
| | உயர்தொழில் கட்டணங்கள் | - | - | 100,000.00 |
| | வைத்தியக் காப்புறுதிக் கட்டணம் | 156,852.95 | 140,299.06 | 50,000.00 |
| | தேய்மானங்கள் | 3,773,842.96 | 2,275,628.46 | - |
| | முத்திரை வரி | 41,350.00 | 27,175.00 | 8,000.00 |
| | கண்காட்சி செலவினங்கள் | 406,055.00 | 135,077.00 | 450,000.00 |
| | பயிற்சிகள் A/C (NAITA) | 282,750.00 | 213,420.00 | 300,000.00 |
| | APLAC மதிப்பீடு A/C | - | - | - |
| | SAARC PTB பயிற்சித் திட்டச் செலவினம் | - | - | - |
| | ஏற்பாடுகள் அதிகரிப்பு/குறைவு | 50.00 | - | - |
| | முன்வழங்கல் ஊழியர் செலவினம் | 81,591.81 | - | - |
| | SLAB IT திட்டம் தவணை முறையில் தீர்வு | 343,560.00 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | தகைமைச் சோதனைத் திட்டங்கள் தவணை முறையில் தீர்வு | 277,672.39 | 150,224.77 | - |
| | | **5,363,725.11** | **2,941,824.29** | **908,000.00** |
| **9)** | **நிதிச் செலவினவும் ஏனையவையும்** | | | |
| | வங்கிக் கட்டணங்கள் | 14,180.00 | 18,790.00 | 18,000.00 |
| | இரத்துச் செய்யப்பட்ட விமானப் பயணச்சீட்டு நட்டம் | - | 4,150.00 | - |
| | நாணயமாற்று நட்டக் கணக்கு | - | 5,708.00 | - |
| | | **14,180.00** | **28,648.00** | **18,000.00** |
| **10)** | **மீள் வழங்கக்கூடிய வைப்புப்பணம் மற்றும் முற்பணம்** | | | |
| | பண்டிகை முற்பணம் | 6,000.00 | 9,000.00 | - |
| | மீள் வழங்கக்கூடிய வைப்பு | 1,226,200.00 | 1,224,000.00 | - |
| | வாடகை முற்பணம் | - | - | - |
| | SLAB கணக்கியல் பொதிக்கான முற்பணம் | - | 33,000.00 | - |
| | | **1,232,200.00** | **1,266,000.00** | **-** |
| **11)** | **பெறுகைகள்** | | | |
| | VAT மீள் பெறுகை | - | 111,813.58 | - |
| | **வர்த்தகப் பெறுகைகள்** | | | - |
| | பரிசோதனை மூலமான பெறுகைகள் | 1,502,840.00 | 1,466,530.00 | - |
| | தரப்படுத்தல் ஆய்வுகூடப் பெறுகைகள் | 42,000.00 | - | - |
| | மருத்துவ ஆய்வுகூடங்களில் இருந்து பெறுகைகள் | 60,000.00 | - | - |
| | சான்றிதழ் அமைப்புக்களில் இருந்து பெறுகைகள் | 240,521.59 | 147,185.16 | - |
| | பரிசோதனை அமைப்புக்களில் இருந்து பெறுகைகள் | - | - | - |
| | ஏனைய பெறுகைகள் | - | - | - |
| | | **1,845,361.59** | **1,725,528.74** | **-** |
| **12)** | **திரட்டிய நிதியம்** | | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவைத் தொகை | 4,908,178.86 | 3,754,994.11 | - |
| | **முந்திய வருட சீராக்கல்கள்** | | | - |
| | மேலதிகப் பெறுகை சீராக்கல் | 3,753.13 | - | - |
| | முந்திய வருட சீராக்கல் | - | 37,565.86 | - |
| | நிலையான சொத்துக்கள் சீராக்கல் | 1.00 | - | - |
| | முன்கொடுப்பனவு சீராக்கல் | 245,455.50 | - | - |
| | Vat சீராக்கல் | (1,694.88) | - | - |
| | பதிவேட்டுப் பொருட்கள் | - | - | - |
| | வருமானத்தின் மேலான செலவினத் தொகை | 59,632.39 | 1,115,618.89 | - |
| | வருட இறுதியில் நிலுவை | **5,215,326.13** | **4,908,178.86** | **-** |

| | | | | |
|---|---|---|---|---|
| 13) | **பின்தள்ளி வைக்கப்பட்ட வருமானம் - அரச மானியம்** | | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவைத் தொகை | 13,576,875.56 | 4,118,898.63 | - |
| | மூலதனச் சொத்துக்களுக்கென பெற்றுக்கொள்ளப்பட்ட மானியமும் உபயோகமும் | 1,500,000.00 | 11,870,000.00 | - |
| | ஆண்டுக்கான தேய்மானச் செலவினம் | (3,773,842.96) | (2,275,628.46) | - |
| | SLAB IT வழிமுறை தவணை அடிப்படையில் தீர்வு | (343,560.00) | - | - |
| | திறமைப் பரிசோதனைத் திட்டத்தின் தவணை அடிப்படையில் தீர்வு | (277,672.39) | - | |
| | பணிக்கொடை ஏற்பாடு | - | 136,394.61 | |
| | வருட இறுதியில் நிலுவை | **10,681,800.21** | **13,576,875.56** | - |
| 14) | **திரண்ட செலவினங்களும் ஏனையவையும்** | | | |
| | ஊழியர் நலன்புரித் திட்டம் | 4,457.40 | - | - |
| | மதிப்பீட்டுச் செலவினம் | 57,247.00 | 40,294.98 | - |
| | போக்குவரத்து | - | 8,209.50 | |
| | விளம்பரங்களும் ஊக்குவிப்பும் | 2,050.00 | - | - |
| | SLAB கணக்கியல் பொதி | 7,500.00 | - | - |
| | பாதுகாப்புச் சேவை | 28,433.00 | 28,433.00 | - |
| | தண்ணீர் | 6,916.00 | 2,256.80 | - |
| | மின்சாரம் | 52,051.26 | 31,018.13 | - |
| | தொலைத்தொடர்புச் செலவினம் | 26,297.90 | 29,979.33 | - |
| | முன்னேற்றத்திற்கான வருடாந்த ஊக்கத் தொகை | 114,000.00 | - | - |
| | கண்காட்சிச் செலவினம் | 2,000.00 | 29,000.00 | - |
| | மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு | 27,410.21 | 15,773.67 | - |
| | இயந்திரங்கள், உபகரணங்கள் பராமரிப்பு | 46,290.96 | 35,907.08 | - |
| | பராமரிப்புச் செலவினம் - சுத்திகரிப்புச் சேவை | 18,360.00 | 18,060.00 | - |
| | திறமைப் பரிசோதனைத் திட்டம் | - | 309,120.00 | |
| | கணக்காய்வுக் கட்டணம் | 233,500.00 | 153,500.00 | - |
| | விடுப்புக் கொடுப்பனவு | 9,276.00 | 377,353.82 | - |
| | தபால் கட்டணங்கள் | 14,140.00 | 10,070.00 | - |
| | **ஏனைய கொடுப்பனவுகள்** | | | |
| | ஊ.சே.நி கட்டுப்பாட்டுக் கணக்கு | 169,785.00 | 134,800.44 | - |
| | ஊ.ந.நி கட்டுப்பாட்டுக் கணக்கு | 20,374.20 | 16,176.05 | - |
| | செலுத்தப்பட வேண்டிய PAYE | 1,817.22 | 2,955.67 | - |
| | முத்திரை வரி | 2,975.00 | 2,450.00 | - |
| | செலுத்தப்பட வேண்டிய VAT | 200,145.48 | - | - |
| | செலுத்தப்பட வேண்டிய NBT | 47,179.99 | 12,296.93 | - |
| | ஊழியர் நலன்புரி நிதியம் | 1,075.00 | 775.00 | - |
| | | **1,105,251.62** | **1,258,430.40** | - |
| 15) | **அரச மானியம்** | | | |
| | ஆண்டின் போது பெறப்பட்ட அரச மானியம் | 16,303,000.00 | 27,380,000.00 | - |
| | மூலதன செலவினத்திற்கென செலவிடப்பட்ட | (1,500,000.00) | (11,870,000.00) | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | மானியம் | | | |
| | தேய்மானக் கணக்கு | 3,773,842.96 | 2,275,628.46 | - |
| | பணிக்கொடை ஏற்பாடு | - | 136,394.61 | - |
| | SLAB IT தவணை அடிப்படையில் தீர்ப்பு | 343,560.00 | - | - |
| | திறமைப் பரிசோதனைத் திட்டம் - தவணை அடிப்படையில் தீர்ப்பு | 277,672.39 | - | |
| | வருமான அறிக்கையில் காண்பிக்கப்பட்ட அரச மானியம் | **19,198,075.35** | **17,922,023.07** | - |
| **16)** | **முன்கூட்டிய பெறுகைகள்** | | | |
| | தேசிய பாடசாலைகள் ஆய்வுகூடப் போட்டித் திட்டம் | 609,700.09 | - | |
| | முதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டம் (மோட்டார் போக்குவரத்து திணைக்களம்) | 571,428.00 | - | |
| | AUT Lamp பரிசோதனை ஆய்வுகூடம் | 40,585.95 | - | - |
| | மேலதிகப் பெறுகைகள் | - | 3,753.13 | - |
| | | **1,221,714.04** | **3,753.13** | - |
| **17)** | **இடர் கடன்கள்** | | | |
| | கொண்டுவரப்பட்ட நிலுவை | 585,000.00 | 317,100.00 | - |
| | ஆண்டில் வழங்கப்பட்ட இடர் கடன்கள் | 510,000.00 | 870,000.00 | - |
| | கழி: தவணை அடிப்படையில் கடன் தீர்வு | (446,700.00) | (602,100.00) | - |
| | | **648,300.00** | **585,000.00** | - |
| **18)** | **முன் கொடுப்பனவுகள்** | | | |
| | கொண்டுவரப்பட்ட நிலுவைத் தொகை | 292,038.22 | 89,055.80 | - |
| | செலவின சீராக்கல் | (244,038.22) | (89,055.80) | - |
| | SLAB வாகனங்கள் மற்றும் பணிப்பாளர் வாகன பராமரிப்பு | 145,606.78 | 151,425.98 | - |
| | சுகாதாரக் காப்புறுதி கட்டுப்பணம் | - | 54,612.24 | - |
| | இயந்திரங்கள், உபகரங்கள் பராமரிப்பு செலவினம் | 25,204.41 | - | - |
| | வாடகை ஒப்பந்தத்திற்கான முத்திரை வரி | - | 84,000.00 | - |
| | குளிரூட்டிகள் சேவைக்கான ஒப்பந்தம் | 3,000.00 | 2,000.00 | - |
| | IAF அங்கத்துவம் கட்டணம் 2014,2015 | 245,455.50 | - | - |
| | பயிற்சித் திட்டச் செலவினம் - மதிப்பீட்டாளர் | 61,913.00 | - | - |
| | வாகன காப்புறுதி (2012.01.01-2012.07.08) | - | - | - |
| | | **529,179.69** | **292,038.22** | - |
| **19)** | **புலமைச் சொத்துக்கள்** | | | |
| | வர்த்தக அடையாளம் | 16,254.20 | 16,254.20 | - |
| | MRA இலச்சினை பதிவு (மேற்கொள்ளப்படும்) | 24,040.80 | 24,040.80 | - |
| | SLAB வெப் தளம் | 96,800.00 | 96,800.00 | - |
| | SLAB கணக்கியல் பொதி | 165,000.00 | - | - |
| | SLAB IT திட்டத்திற்கான மென்பொருள்கள் | 1,717,800.00 | 1,717,800.00 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | கழி: SLAB IT திட்டங்களின் தவணை அடிப்படையிலான தீர்வு | (343,560.00) | - | - |
| | **அபிவிருத்தி நடவடிக்கைகள்** | | | - |
| | திறன் பரிசோதனைத் திட்டம் | 597,044.77 | 705,569.54 | - |
| | திறன் பரிசோதனைத் திட்ட பெறுகை | - | - | - |
| | கழி: திறன் பரிசோதனைத் திட்ட தவணை அடிப்படையிலான தீர்வு | (277,672.39) | (150,224.77) | - |
| | | **1,995,707.38** | **2,410,239.77** | **-** |
| **20)** | **காசும் காசுக்கு சமமானவையும்** | | | |
| | வங்கியிலுள்ள பணம் | 1,739,436.65 | 1,152,711.04 | - |
| | இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி 2வது கிளை (கணக்கு இல 3000203) | | | |
| | FEEA (வெளிநாட்டு நாணயமாற்று சம்பாத்திய கணக்கு) | 98.37 | - | - |
| | | **1,739,535.02** | **1,152,711.04** | **-** |
| **21)** | **ஏனைய மானியங்கள்** | | | |
| | SLAB யின் வெப் தளம் | 96,800.00 | 96,800.00 | - |
| | SLAB IT க்கான மென்பொருட்கள் | 1,717,800.00 | 1,717,800.00 | - |
| | | **1,814,600.00** | **1,814,600.00** | **-** |
| **22)** | **நீண்டகால ஏற்பாடுகள்** | | | |
| | பணிக்கொடைக்கான ஏற்பாடு | 1,213,110.90 | 687,354.61 | - |
| | | **1,213,110.90** | **687,354.61** | **-** |
| **23)** | **உலக தராதர அங்கீகார தின நடவடிக்கைகள்** | | | |
| | **மொத்த சேகரிப்புக்கள்** | 1,197,796.00 | 769,000.00 | |
| | அனுசரணையாளர்களிடமிருந்து 670,000.00 | | | |
| | கருத்தரங்குகள்/பயிற்சித் திட்டங்கள் மூலம் 527,796.00 | | | |
| | **கழி :-** | | | |
| | **மொத்தச் செலவுகள்** | | | |
| | விளம்பரங்களும் அச்சிடலும் 840,410.00 | 1,948,775.75 | 1,643,456.61 | 800,000.00 |
| | ஹோட்டல் மற்றும் உணவு 840,177.78 | | | |
| | பிரயாணம் 245,815.47 | | | |
| | ஏனையவைகள் 22,372.50 | | | |
| | தேறிய மேலதிகம் (பற்றாக்குறை) | | | |
| | SLAB இலாபத் தொகைக்கு மாற்றம் (குறிப்பு இல. 01) (750,979.75) | | (874,456.61) | |
| **24)** | **ஆகற்றல் சொத்துக்கள்** | | | |
| | மவுஸ் | 01 | | |
| | மவுஸ் | 01 | | |
| | மவுஸ் | 01 | | |
| | பென் டிரைவ் | 01 | | |
| | பென் டிரைவ் | 01 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பென் டிரைவ் | 01 | | |
| | பிரின்டர் | 01 | | |
| | மேசை | 01 | | |
| | தொலைபேசி அமைப்பு | | | |
| | சுடுநீர் கேத்தல்கள் | | | |
| | பெயர்ப்பலகை | | | |
| | கூட்டல் இயந்திரங்கள் | - | **12.00** | **-** |
| | தேசிய பாடசாலைகள் ஆய்வுகூடம் | | | |
| **25)** | போட்டிகள் திட்டம் | | | |
| | தேசிய விஞ்ஞான மன்றத்தின் அனுசரணை | 2,000,000.00 | | |
| | கழி: பாடசாலை திட்டச் செலவினங்கள் | (1,390,299.91) | | |
| | முன்கூட்டிய பெறுகைகள் (குறிப்ப இல.16) | **609,700.09** | **-** | **-** |

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

26) ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

| விபரம் | | | | | திரட்டிய தேய்மானம் | | | கழிக்கப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 01.01.2013 இல் நிலுவை | வருடத்திற்கான சேர்க்கைகள் | அகற்றல் | 31.12.2013 இல் மீதி | 01.01.2013 இல் மீதி | ஆண்டுக்கான தேய்மானம் | 31.12.2013 இல் மீதி | 31.12.2013 இல் | 31.12.2012 இல் |
| **மோட்டார் வாகனம்** | 14,900,000.00 | | | 14,900,000.00 | 2,121,666.67 | 2,980,000.00 | 5,101,666.67 | 9,798,333.33 | 12,778,333.33 |
| **கட்டடங்களும் அமைப்புக்களும்** | 144,800.00 | 33,660.00 | | 178,460.00 | 19,910.00 | 52,941.67 | 72,851.67 | 105,608.33 | 124,889.00 |
| **அலுவலக உபகரணங்கள்** | | | | | | | | | |
| i). குளிரூட்டிகள் | 697,070.00 | | | 697,070.00 | 235,618.83 | 84,762.00 | 320,380.83 | 376,689.17 | 461,451.17 |
| ii). மல்டிமீடியா புரொஜெக்டர் | 255,200.00 | | | 255,200.00 | 234,989.84 | 12,125.00 | 247,114.84 | 8,085.16 | 20,210.16 |
| iii). பிரதிபண்ணும் இயந்திரம் | 308,250.00 | | | 308,250.00 | 158,999.00 | 49,750.00 | 208,749.00 | 99,501.00 | 149,251.00 |
| iv). தொலைபேசி அமைப்புகள் | 202,912.30 | 46,300.00 | | 249,212.30 | 77,370.93 | 35,770.43 | 113,141.36 | 136,070.94 | 125,541.37 |
| v). தொலைநகல் இயந்திரம் | 57,385.00 | | | 57,385.00 | 57,383.00 | - | 57,383.00 | 2.00 | 2.00 |
| vi). ஏனைய அலுவலக உபகரணங்கள் | 167,650.11 | 3,625.00 | | 171,275.11 | 84,770.46 | 31,087.24 | 115,857.70 | 55,417.41 | 82,879.65 |
| அலுவலக தளபாடம் | 1,469,392.78 | 371,831.69 | | 1,819,805.72 | 1,016,052.74 | 143,533.44 | 1,138,167.43 | 681,638.29 | 453,340.04 |
| **கணனிகள்** | | | | | | | | | |
| i). டெஸ்க்டொப் கணனிகள் | 1,382,520.00 | 694,865.00 | | 2,077,385.00 | 1,088,470.32 | 224,178.33 | 1,312,648.65 | 764,736.35 | 294,049.68 |
| ii). லெப்டொப் கணனிகள் | 894,230.00 | | | 894,230.00 | 773,234.49 | 72,764.83 | 845,999.32 | 48,230.68 | 120,995.51 |
| iii). ஸ்கானர் | 23,500.00 | | | 23,500.00 | 23,499.00 | - | 23,499.00 | 1.00 | 1.00 |
| iv). பிரின்டர்கள் | 437,952.00 | 267,500.00 | - | 667,990.00 | 422,821.96 | 44,026.67 | 429,386.63 | 238,603.37 | 15,130.04 |
| v). ஏனைய கணனி உதிரிப்பாகங்கள் | 101,899.85 | 46,250.00 | - | 148,149.85 | 74,775.21 | 16,383.35 | 91,158.56 | 56,991.29 | 27,124.64 |
| பொது - WIFI | 132,600.00 | | | 132,600.00 | 2,210.00 | 26,520.00 | 28,730.00 | 103,870.00 | 130,390.00 |
| **மொத்தம்** | **21,175,362.04** | **1,464,031.69** | | **22,580,512.98** | **6,391,772.45** | **3,773,842.96** | **10,106,734.66** | **12,473,778.32** | **14,783,588.59** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / துலைவா / My No: எல்எஸ்/ஈ /எல்எஸ்ஏபீ /எப்ஏ/2013

මබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date: 2014 ஒக்டோபர் 09

**தலைவர்**
**ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை**

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2013 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை அதிகார சட்டத்தின் iv ஆம் பகுதியின் 29(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2014 ஜூன் 26 ஆம் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து, நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும், நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள்

வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும், வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி, சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும், முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (03) ஆம் மற்றும் (04) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல.01 இன் 48 ஆம் பிரிவின் பிரகாரம் வருமான செலவினங்கள் ஒன்றுடன் ஒன்று தீர்க்கப்படலாகாத போதிலும், வருடாந்தம் நடத்தப்படும் ‘உலக

ஒத்தியல்பு தினக் கொண்டாட்டம்’ தொடர்பாக மீளாய்வு ஆண்டின் போது அனுசரணையாளர்களிடம் இருந்தும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுவதன் மூலமும் பெறப்படும் வருமானங்களும், ஏற்கப்படும் செலவினங்களும், வெவ்வேறானக் காண்பிக்கப்படாது, ஒன்றுடன் ஒன்று எதிரீடு செய்யப்பட்டு, ரூபா 750,980 தொகை தேறிய நட்டமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையால் அந்நியச் செலாவனிக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவதுடன், 2012 ஆண்டின் போது ரூபா 5,708 தொகையான அந்நியச் செலாவனி பரிமாற்று நட்டம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2013 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுத் தொகுதியில் கணக்கீட்டுக் கொள்கை 1.11 இன் கீழ் அந்நியச் செலாவனி விகிதாசார மாற்றங்களின் தாக்கம் கணக்கீடு செய்யப்பட்டிராமையும் 2014 ஆம் ஆண்டு முதல் கணக்கீடு செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், சபையால் அந்நியச் செலாவனி கணக்கீடு செய்யப்படுவது தொடர்பாக ஒரே விதமான கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் 6.5.3 ஆம் பந்தி | கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் 2013 ஆம் ஆண்டின் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.4.3 ஆம் பிரிவு | வழங்குநர்கள் பதிவு செய்யப்படாது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒரே நிறுவனத்திடம் இருந்து உணவு வகைகள் பெற்றுக்கொண்டமைக்காக மீளாய்வு ஆண்டின் போது ரூபா 1,007,325 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | |
| | (i) 8.3.3 ஆம் பிரிவின் (இ) பந்தி | திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது மீளாய்வு ஆண்டின் போது செயற்திறனின் அடிப்படையில் ஊக்குவிப்புப் படி கொடுப்பனவாக ரூபா 114,000 தொகையும், சேமிக்கப்பட்ட வைத்திய விடுமுறையின் அடிப்படையில் ரூபா 447,091 தொகையான படியும் செலுத்தப்பட்டிருந்தன. |
| | (ii) 9.14.2 ஆம் பிரிவு | திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் |

| | | |
|---|---|---|
| | | பெறப்படாது முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தில் மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக அலுவலகக் கைந்நூல் ஒன்று 2013 ஜுலை 01 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2010 ஒக்டோபர் 11 ஆம் திகதிய எம்ஓஎப்பீ/01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் சுற்றறிக்கை | வெளிநாட்டுப் பயணத்திற்காக கொடுப்பனவு செய்யப்படுகையில் அமயச் செலவுக் கொடுப்பனவு மற்றும் ஒன்றிணைந்த படி கொடுப்பனவிற்பாக, வெளிநாட்டில் உள்ள ஒரு நாளுக்கு ரூபா 7500 படி பயணக் கட்டணமும், மதிப்பீட்டுக் கட்டணமாக ஒரு நபருக்கு சார்க் நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் முறையே ரூபா 12,000 தொகையும், ரூபா 18,000 தொகையுமாக முகாமைத்துவச் சபையால் 2012 நவம்பர் 16 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன்படி, மீளாய்வு ஆண்டின் போது வெளிநாட்டுப் பயணத்திற்காக சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 363,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

### 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்காக சபையின் செயற்பாடு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 59,633 மிகையாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்காக ரூபா 1,115,619 மிகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,055,986 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தராதர அங்கீகாரம் தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டுவதற்காக மீளாய்வு ஆண்டின் போது இலத்திரனியல் ஊடகங்களுக்கு இரண்டு சமர்ப்பணங்களும் அச்சீட்டு ஊடகங்களுக்கு இரண்டு கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படுவதற்கு வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இதில் ஒரு சமர்ப்பணமோ கலந்துரையாடலேனும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தராதர அங்கீகாரத்திற்காக விண்ணப்பங்கள் அனுப்பும் நேரடி கணனி முறைமை (Online system) இற்காக மீளாய்வு ஆண்டின் போது ரூபா 350,924 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு தினத்தில் தராதர அங்கீகாரத்திற்காக ஒரு விண்ணப்பமேனும் நேரடி கணனி முறைமை மூலம் நிறுவகத்திற்கு கிடைத்திருக்கவில்லை. நிறுவக வலையமைப்பில் இந்நேரடி முறைமையின் மூலம் தராதர அங்கீகாரத்திற்காக விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இயலுமை தெளிவாக காண்பிக்கப்படாமை இதற்கு காரணமாக இருந்தது.

**4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் இன்றியும், அரச பங்களிப்பாக எவ்வித தொகையும் அறவிடப்படாது மதிப்பீட்டாளர்கள் பயிற்றுவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டிற்காக சபை உத்தியோத்தர்களை வளப் பகிர்வாளர்களாக ஈடுபடுத்தி பிரதான விரிவுரையாளர்கள் மற்றும் உதவி உத்தியோகத்தர்களுக்காக முறையே ரூபா 240,000 தொகையும், ரூபா 31,900 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஜுன் 01 ஆம் திகதிய 34(1) ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை மற்றும் சபையால் வளங்கல் அலுவலக கைந்நூலில் 12.5 ஆம் பந்தியின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய இணைந்த படி ரூபா 500 ஆன போதிலும், ஒருவருக்கு ரூபா 2000 படி 08 உத்தியோகதர்தர்களுக்கு மீளாய்வு ஆண்டின் போது ரூபா 35,600 தொகை அதிகரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. இச்செயலமர்வுகளில் கலந்து கொள்வதற்காக நிறுவகத்தின் மூலம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்காக மீளாய்வு ஆண்டின் போது சபையால் ரூபா 229,952 தொகையான போக்குவரத்துச் செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

**4.3 பதவியணி நிர்வாகம்**

2012 நவம்பர் 19 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் நிறுவகத்திற்கு முதல் தடவையாக உள்ளக கணக்காய்வாளர் பதவி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 2008 ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் வேலை மேவும் அடிப்படையில் நியமதிக்கப்பட்டிருந்த ஓர் உத்தியோகத்தர் கணக்காய்வு தினமாகிய 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையும் அப்பதவியின் கடமைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**5. கணக்களி பொறுப்பும் நல்லாழுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வு ஆண்டின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள், செலவினத்துடன் ஒப்பிடுகையில் 2% முதல் 149% வரையிலான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.2 ஆண்டறிக்கை சபையில் சமர்ப்பித்தல்**

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2011 இன் ஆண்டறிக்கை 2013 ஜுலை 23 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) பதவியணி கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) கொள்வனவு நடைமுறை

ஒப்பம்
எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අනුකූලතා තක්සේරු පිළිබඳ ශ්‍රී ලංකා ප්‍රතීතන මණ්ඩලය
ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை
Sri Lanka Accreditation Board for Conformity Assessment

නො. 546/4, ගාලු පාර, කොළඹ 03, ශ්‍රී ලංකාව.
இல 546/4, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை.
No. 546/4, Galle Road, Colombo 03, Sri Lanka.

2013 ஒக்டோபர் 20

கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்
306/72 பொல்துவ வீதி
பத்தரமுல்ல

**இலங்கை தராதர அங்கீகார சபையின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான கணக்குகள் பற்றிய 1971 ஆம் ஆண்டில் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(c) க்கு அமைவான கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை**

**கருத்து வெளியிடுதல்**

உங்களது 2014 ஒக்டோபர் 09 ஆம் திகதிய SL/02/E/SLAB/1/13/25 ஆம் இலக்க கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கைக்கான பதில்.

**2.2 நிதி அறிக்கைகள் மீதான குறிப்புக்கள்**

**2.2.1 அரசதுறை கணக்கியல் தரங்களுக்கு இணங்காமை**

அனுசரணை மற்றும் பயிற்சித் திட்டங்கள் மூலமான வருமானம் ரூபா 1,197,796.00 மற்றும் நிகழ்ச்சிக்கான மொத்தச் செலவினம் ரூபா 1,948,776.00 ஆகும். 2013 ஆம் ஆண்டில் உலக தராதர அங்கீகார தின நிகழ்ச்சிகளுக்கான தேறிய செலவினம் ரூபா 750,980.00. உலக தராதர அங்கீகார தினம் வருடா வருடம் இலங்கை தராதர அங்கீகார சபையினால் கொண்டாடப்படுகிறது.

**2.2.2 கணக்கியல் கொள்கைகள்**

டொலர், யூரோ மற்றும் ஏனைய வெளிநாட்டு நாணயங்களைச் சேகரிப்பதற்கென, 2013 ஜுலை 04 ஆம் திகதி வெளிநாட்டு நாணய சேமிப்புக் கணக்கு திறக்கப்பட்டது. வெளிநாட்டு நாணயக் கணக்கில் இருந்து வருமானத்தைச் சேகரிக்கவென ஒப்படைப்புக் கணக்குப் படிவம் ஒன்று வழங்கப்படுவது வழக்கமாகும். வெளிநாட்டு நாணயம் பெற்றுக்கொள்ளப்பட்டதும், அது ரூபா மதிப்பின் அடிப்படையில் மாற்றப்பட்டு, வெளிநாட்டு நாணய சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு, பின்னர் சம்பந்தப்பட்ட வருமானக் கணக்குகளில் கடன் பற்றாகக் காண்பிக்கப்படும். காசுப் பாய்ச்சலுக்கென நிதி தேவைப்படும் போது,

வெளிநாட்டு நாணயம் பெற்றுக்கொள்ளப்படும். வெளிநாட்டு நாணயத்தின் இலாபம் அல்லது நட்டம் அந்த தருணத்தில் இனங்காணப்படும். 2013 ஜூலை மாதத்தில் வெளிநாட்டு நாணயமாற்றுக் கணக்குகள் திறக்கப்பட்டதை அடுத்து, 2014 ஆம் ஆண்டில் இருந்து இந்த வழிமுறையை மாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் ரூபா 4,991.00 குறிப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.

**2.2.3 சட்டங்கள் பிரமானங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

(அ) 2013 ஆம் ஆண்டு வரை IERS தரத்திற்கு அமைய கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டுக்கான கணக்குகளும் அதே வழிமுறைக்கு அமைய தயாரிக்கப்பட்டு 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும், அரசதுறை கணக்கியல் தரத்திற்கமைய கணக்குகளை மீள் தயாரிப்புக்கும் சமர்ப்பிப்பதற்கும் மேலும் 30 நாட்கள் தேவைப்பட்டன.

(ஆ) விளம்பரத்தின் அடிப்படையில் விநியோகத்தர் ஒருவர் பதிவு பெற்றிராவிட்டாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தர் குழுவினர் இனங்காணப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளனர். கூறுவிலை மதிப்பீட்டின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தர்களுக்கு கொள்வனவுக் கட்டளைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

கூறுவிலைகள் கோரப்பட்டதும் ரஸ்ஸல் தனியார் நிறுவனம் உணவுப் பொருட்களை வழங்குவதற்கான ஆகக்குறைந்த விலையைத் தெரிவித்திருந்தது. எனவே, ரஸ்ஸல் நிறுவனத்திடமிருந்து சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

(இ) (i) சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து தொடர்ச்சியாக இந்தக் கொடுப்பனவு இடம்பெற்றுள்ளது. திறைசேரியில் இருந்து நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளாமல், இலங்கை தராதர அங்கீகார சபை தனது சொந்த நிதியில் சேவையாற்ற விரும்பியதனால், குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கென ஊழியர்களின் மன நிறைவைப் பெற்றுக்கொள்வதற்காக ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் இந்தக் கொடுப்பனவு செய்யப்பட்டது.

(ii) சபையின் மனிதவள முகாமைத்துவக் கையேட்டை திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பவென தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) வெளிநாட்டு மதிப்பீட்டு நடவடிக்கைகளில் பங்குபற்றும் மதிப்பீட்டாளர்களுக்கு சார்க் நாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் நாளொன்றுக்கு மதிப்பீட்டுக் கட்டணமாக ரூபா 12,000/- மும் போக்குவரத்துச் செலவினமாக ரூபா 7500/- உம் ஏனைய நாடுகளுக்கு ரூபா 18,000/- மும் வழங்கப்பட்டது. இந்தக் கட்டணங்கள் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட விலைப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

**3. நிதித்துறை மீளாய்வு**

### 3.1 நிதித்துறைப் பெறுபேறுகள்

கருத்திற்கொள்ளப்பட்டது.

### 4. செயற்பாட்டு மீளாய்வு

(அ) ஆய்வுக்குரிய வருடத்தில் இரண்டு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக கலந்துரையாடல்கள் நடத்துவதென திட்டமிடப்பட்ட போதிலும், இந்த நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டன. நாடளாவிய ரீதியில் பாடசாலை ஆய்வுகூடப் போட்டிகளை கல்வி அமைச்சினதும் சுகாதார அமைச்சின் வைத்தியசாலை தராதர அங்கீகார திட்டத்தினதும் அனுசரணையுடன் நடத்துவதே இதற்கான காரணமாகும்.

(ஆ) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தராதர அங்கீகார சேவைகளை நாம் வழங்குவதனால் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒன்லைன் வழிமுறை தேவைப்பட்டது. இருந்த போதிலும், இந்த வாடிக்கையாளர்கள் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு ஒன்லைன் வழிமுறையுடன் பழக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், எதிர்காலத் தேவைகளுக்கென ஒன்லைன் வழிமுறை தற்சமயம் உள்ளது.

### 4.2 (அ) சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டம் என்பது, தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் நீடிக்கும் விசேட நடவடிக்கையாகும். இந்தப் பயிற்சியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் மதிப்பீட்டாளர்கள் இலங்கை தராதர அங்கீகார சபையின் மதிப்பீட்டாளர் குழுவில் சேர்க்கப்படுகின்றனர். இந்தத் திட்டம் வெற்றியடைவதற்கு வளவாளர்களின் சேவை அவசியம் என்பதனால், ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் இந்தக் கொடுப்பனவு செய்யப்பட்டது.

(ஆ) நாடளாவிய ரீதியிலான பாடசாலை ஆய்வுகூடப் போட்டியை மதிப்பீடு செய்வதில் பங்குபற்றிய அதிகாரிகளுக்கு ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் இந்த வாழ்வாதாரத் தொகை வழங்கப்பட்டது.

### 4.3 ஊழியர் நிர்வாகம்

இலங்கை தராதர அங்கீகார சபையின் உள்ளகக் கணக்காய்வாளர் நியமனம் ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியினால் செய்யப்பட்டது. இலங்கை தராதர அங்கீகர சபையின் சட்டத்தின் அடிப்படையில் ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியினால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டது. பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் நியமனம் மாத்திரம் அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படுவது வழக்கமாகும்.

உள்ளகக் கணக்காய்வாளரின் நிரந்தர பதவிக்கான அங்கீகாரம் 2012.11.22 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த விடயம் ஆளுநர் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதும் மொத்த வேலைப்பழு மற்றும் சபையின் ஊழியர்களின் எண்ணிக்கை என்பனவற்றை கருத்திற்கொண்டு அவரது சேவையை தொடர்ந்து பெறுவதென்ற கருத்தை ஆளுநர் சபை கொண்டிருந்தது. நிரந்தர அடிப்படையில் உள்ளகக் கணக்காய்வாளரை நியமிப்பதில் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே

மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5. கணக்கியல் தன்மையும் சிறந்த நிர்வாகத் திறமையும்

### 5.1 வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு

ரூபா 4,299,599.00 தேய்மானமும் பணிக்கொடை ஏற்பாடும், ஏனைய செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளன. இது நீக்கப்பட்டதும் உண்மையான மற்றும் வரவு செலவுத் திட்ட தொகைகளுக்கு இடையிலான வித்தியாசம் ஒதுக்கீட்டுத் தொகைக்கு உட்பட்டிருக்கும்.

### 5.2 பாராளுமன்றத்தில் ஆண்டறிக்கையை சமர்பபித்தல்

பாராளுமன்றத்திற்கு 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென இருந்த போதிலும் 150 நாட்களுக்கள் கணக்காய்வாளர் அறிக்கை பெற்றுக்கொள்ளப்படவில்லை. 2012 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு 2014 ஓகஸ்ட் 20 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது.

### 6. வழிமுறைகளும் கட்டுப்பாடுகளும்

(அ) வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு
(ஆ) ஊழியர் கட்டுப்பாடு
(இ) கணக்கியல்
(ஈ) கொள்வனவு

குறைபாடுகள் சம்பந்தமான விசேட கவனத்திற்குரிய குறிப்பு கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

பாசன் குணசேன
தலைவர்
இலங்கை தராதர அங்கீகர சபை

## SLAB தராதர அங்கீகார அடையாளம்

## SLAB தராதர அங்கீகார அடையாளம்

PANTONE 294C

PANTONE 136C

**இணைப்பு I**

**சான்றிதழ் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| டொக்டர் நிர்மாலி டி சில்வா | மன்ற உறுப்பினர், சிரேஷ்ட விரிவுரையாளர், புடவை வகைகள் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| டொக்டர் சரத் அபேவர்தன | பணிப்பாளர், தேசிய விஞ்ஞான மன்றம் |
| திரு. டீ.குணசேகர | தலைவர், உணவு பதனிடுவோர் சங்கம் |
| திரு. கே.எச்.முத்துக்குடாராச்சி | பிரதிப் பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| திரு. என்.கே.ஏ.ரூபசிங்க | பிரதிப் பணிப்பாளர், தொழில்நுட்பம், ஏற்றுமதி விவசாய திணைக்களம் |
| திரு. வஜிர பெரேரா | பணிப்பாளர், (NVQ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்பப்பயிற்சி நிறுவனம் |
| திரு.ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |

**இரசாயனப் பரிசோதனை மற்றும் ஆய்வுகூட அளவை மீதான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் (செல்வி) சிரிமாலி பெர்னாண்டோ | மன்ற உறுப்பினர், நுண்ணுயிரியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| டொக்டர் நிர்மாலி டி சில்வா | மன்ற உறுப்பினர், சிரேஷ்ட விரிவுரையாளர், புடவை வகைகள் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திரு. ஈ.ஜீ.சோமபால | முன்னாள் அரசாங்கப் பகுப்பாய்வாளர், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் |
| பேராசிரியர் டீ.ஏ.தந்திரிகொட | பௌதீகவியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எச்.டி.குணவர்தன | இரசாயன விஞ்ஞானத்தில் பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| திரு. எச்.எல்.ஆர்.டபிள்யூ.மதநாயக்க | முன்னாள் பணிப்பாளர், அளவை நிறுவை திணைக்களம் |
| கலாநிதி திருமதி இந்திகா அபேகுணவர்தன | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |

**மருத்துவ பரிசோதனை ஆய்வுகூடங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் (செல்வி) சிரிமாலி பெர்னாண்டோ | மன்ற உறுப்பினர், நுண்ணுயிரியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| கலாநிதி ஏ.எம்.முபாறக் | மன்ற உறுப்பினர், பணிப்பாளர், கைத்தொழில் தொழில்நுட்ப நிலையம் |
| கலாநிதி சுஜாதா மனன்வத்த | ஆலோசகர், நுண் உயிரியல் துறை, தேசிய STD/AIDS நோய் |

| | |
|---|---|
| | கட்டுப்பாட்டுத் திட்டம் |
| டொக்டர் (திருமதி) மாலா எம்.ஜயதிலக | ஆலோசகர், நுண் உயிரியல் துறை, தேசிய புற்று நோய் வைத்தியசாலை |
| பேராசிரியர் (செல்வி) ஜெனிபர் பெரேரா | பேராசிரியர் நுண் உயிரியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எம்.ஐ.தாப்ரூ | வருகைதரு உயிரியல் இரசாயன விஞ்ஞான பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| டொக்டர் (திருமதி) எம்.எம்.குணதிலக்க | இரசாயன நோயியில் ஆலோசகர், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் |
| டொக்டர் கே.சீ.கே.வாசலஆரச்சி | இரசாயன நோயியில் ஆலோசகர், கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை |
| கலாநிதி (திருமதி) எம்.என்.துடாவை | சரும நோயியல் ஆலோசகர், டேடர்ன்ஸ் வைத்தியசாலை |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |

**மேற்பார்வை நிறுவனங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| கலாநிதி ஏ.ஜீ.ரீ.சுகதபால | பணிப்பாளர், இலங்கை செயற்படு ஆற்றல் அதிகார சபை |
| பேராசிரியர் எஸ்.எம்.ஏ.நாணயக்கார | சிவில் எந்திரவியல் திணைக்களம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் |
| டொக்டர் எல்.டீ.ஜே.எப்.நாணயக்கார | சிரேஷ்ட விரிவுரையாளர், பொறியியல் தொழில்நுட்ப திணைக்களம், களனி பல்கலைக்கழகம் |
| திரு. ரீ.எஸ்.அமரவங்ச | முன்னாள் உதவிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை நியமங்கள் நிறுவனம் |
| டொக்டர் ஜீ.ஏ.எஸ்.பிரேமகுமார | பணிப்பாளர் நாயகம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |
| திரு. எல்.எச்.டீ.பந்துசோம | பிரதிப் பணிப்பாளர், இலங்கை தராதர அங்கீகார சபை (செயலாளர்) |

**இரசாயனப் பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| திரு. ஈ.ஜீ.சோமபால | முன்னாள் அரசாங்கப் பகுப்பாய்வாளர், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் |
| திரு. ஆர்.எம்.ஜீ.பீ.ராஜநாயக்க | நகர பகுப்பாய்வாளர், கொழும்பு மாநகர சபை |
| பேராசிரியர் ஆர்.டீ.விஜேசேகர | இரசாயனவியல் பற்றிய பேராசிரியர், பேராதனை பல்கலைக்கழகம் |
| கலாநிதி சாரங்கா விக்கிரமஆரச்சி | இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயனவியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| கலாநிதி ஏ.எம்.முபாறக் | முன்னாள் பணிப்பாளர், கைத்தொழில் தொழில்நுட்ப நிலையம் |
| கலாநிதி எல்.எம்.கே.திலகரத்ன | இரசாயன பரிசோதனைகள் பற்றிய ஆலோசகர் |

**உயிரியல் பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் (திருமதி) சந்திரானி விஜேரத்ன | தாவர விஞ்ஞானம் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் (திருமதி) சீ.பீ.கொடிக்கார | நுண் உயிரியல் பற்றிய பேராசிரியர், களனி பல்கலைக்கழகம் |
| டொக்டர் காபன் குரே | நுண் உயிரியல் நிபுணர், வைத்திய பரிசோதனை நிறுவனம் |
| கலாநிதி (திருமதி) சீ.எம்.நாணயக்கார | தாவர விஞ்ஞானம் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| கலாநிதி (திருமதி) எஸ்.ஐ.அபேகுணவர்தன | நுண் உயிரியல் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |

**இயந்திரப் பரிசோதனை, அளவீடுகள் மற்றும் அளவை திருத்தல் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் டீ.ஏ.தந்திரிகொட | பௌதீகவியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எஸ்.எம்.ஏ.நாணயக்கார | சிவில் எந்திரவியல் திணைக்களம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் |
| திரு.எச்.எல்.ஆர்.டபிள்யூ.மதநாயக்க | முன்னாள் பணிப்பாளர், அளவை நிறுவை திணைக்களம் |
| திரு.எச்.பீ.என்.ஜே.குணசேகர | முன்னாள் பிரதிப் பணிப்பாளர் (தொழில்நட்ப சேவைகள்), ITI |
| திரு. எஸ்.என்.நைல்ஸ் | சிரேஷ்ட விரிவுரையாளர், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திருமதி என்.டீ.ஜீ.விஜேசிறிவர்தன | பிரிவுத் தலைவர், மின் மற்றும் இலத்திரனியல் பிரிவு, NERD சென்றல் ஸ்ரீலங்கா |
| திருமதி பீ.டீ.சீ.ஜனஷாந்தி | இலத்திரனியல் பொறியியலாளர், நவீன தொழில்நுட்பத்திற்கான ஆதர் சீ கிளாக் நிலையம் |

**வைத்திய ஆய்வுகூட பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் (செல்வி) சிரிமாலி பெர்னாண்டோ | மன்ற உறுப்பினர், நுண்ணுயிரியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், தேசிய விஞ்ஞான மன்றத் தலைவர் |
| பேராசிரியர் திருமதி வசந்தி தேவநேசம் | நுண் உயிரியல் பராசிரியர், பேராதனை பல்கலைக்கழகம் |
| கலாநிதி (திருமதி) எம்.எம்.குணதிலக | ஆலோசகர், நோய் இரசாயன விஞ்ஞானம், வைத்திய பரிசோதனை நிறுவனம் |
| டொக்டர் (திருமதி) எம்.என்.துடாவை | குருதியியல் ஆலோசகர், கொழும்பு தேசிய வைத்தியசாலை |
| பேராசிரியர் (திருமதி) பிரீதிகா அங்குணாவெல | நோய்க்கூற்றியல் பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| டொக்டர் (திருமதி) ஏ.சமரசேகர | நுண்திசு நோய் கூறுஇயல் ஆலோசகர், கொழும்பு கண் வைத்தியசாலை. |
| டொக்டர் (திருமதி) டீ.ஜீ.என்.என்.ரணசிங்க | குருதியியல் ஆலோசகர், உறுப்பினர், இலங்கை குருதியியல் கல்லூரி |
| டொக்டர் (திருமதி) குஷ்லானி ஜயதிலக | நுண் உயிரியல்துறை ஆலோசகர், உறுப்பினர், இலங்கை நுண் உயிரியல் நிபுணர்கள் கல்லூரி |

| | |
|---|---|
| டொக்டர் (திருமதி) சரோஜா சீ சிரிவர்தன | இரசாயன நோய்க்குறி ஆய்வு ஆலோசகர், தேசிய வைத்தியசாலை கொழும்பு |
| பேராசிரியர் நெலும் டி சில்வா | நுண் உயிரியல் பேராசிரியர், வைத்திய பீடம், ருஹுணு பல்கலைக்கழகம் |

**தர முகாமைத்துவ தொகுதிகள் மற்றும் உற்பத்தி சான்றிதழ்கள் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| கலாநிதி எல்.என்.செனவீர | பணிப்பாளர் நாயகம், இலங்கை நியமங்கள் நிறுவனம் |
| திரு.ஆர்.டபிள்யூ.எஸ்.எம்.என்.மனோரத்ன | பிரதிப் பணிப்பாளர், மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| திரு. டபிள்யூ.பீ.ஜயந்த பத்மசிரி | முகாமையாளர், PDK லங்கா தனியார் நிறுவனம் |
| திருமதி துஷாந்தி ரன்பத்திகே | பொறியியல் பரிசோதகர், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் |
| கலாநிதி ஜீ.பீ.ஹேரத் | சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் திருமதி நிலந்தி பண்டார | பேராசிரியர், வன மற்றும் சூழல் விஞ்ஞான திணைக்களம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| திரு.சஞ்ஜய பத்திராஜ | முகாமைத்துவப் பணிப்பாளர், Control Unio Inspection (pvt) Ltd |

**பச்சை வாயு சான்றிதழ் வழங்குதல் மற்றும் உறுதிப்படுத்தல் நிறுவனங்கள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் திரு.ஆர்.ஏ.அத்தகே | பேராசிரியர், கைத்தொழில் பொறியியல் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திரு.சமந்த குமாரசேன | பிரதி பணிப்பாளர் நஷனல் கிளீனர் புரடன்ஷன் சென்றர் |
| டொக்டர் எம்.வை.குணசேகர | சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயன பொறியியல் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| டொக்டர் சுரேன் பட்டகொட | முகாமைத்துவ பணிப்பாளர், இலங்கை காபன் நிதியம் |
| திரு.ருவன் வீரசூரிய | சுற்றாடல் அதிகாரி, சுற்றாடல் அமைச்சு |
| திருமதி ஹிரந்தி ஜான்ஸ் | உதவிப் பணிப்பாளர், மத்திய சூழல் அதிகார சபை |
| டொக்டர் ஆர்.டி.எஸ்.ஜயதுங்க | பணிப்பாளர், சுற்றாடல் அமைச்சு |
| திரு. திலக் குணசேகர | பரிசோதனை பொறியியலாளர், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் |
| திரு. ரவி டி சில்வா | சுற்றாடல் ஆலோசகர், எய்கன் ஸ்பென்ஸ் |
| டொக்டர் டபிள்யூ.எம்.பீ.எஸ்.பீ.வாஹல | கலாநிதி சப்ரகமுவ பல்கலைக்கழகம் |

**ஆய்வுகூட மருத்துவத் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (GLP)**

| | |
|---|---|
| பேராசிரியர் எச்.டீ.குணவர்தன | இரசாயனவியல் பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் (திருமதி) என்.எஸ்.குமார் | அடிப்படைக் கல்வி நிறுவனம் |
| திரு.எஸ்.சோமசிரி | முன்னாள் சிரேஷ்ட தர மதிப்பீட்டு முகாமையாளர், ITI |
| டொக்டர் (திருமதி) எம்.கே.பீ.வீரசூரிய | சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயனவியல் திணைக்களம், களனி பல்கலைக்கழகம் |
| திருமதி பீ.எம்.ஜீ.பத்திராஜா | ஆராய்ச்சி விஞ்ஞானி, NERD நிலையம் |
| டொக்டர் நில்வலா கோட்டேகொட | ஆராய்ச்சி விஞ்ஞானி, SLINTEC |

| | |
|---|---|
| டொக்டர் மலிந்ரா ஜான்-பட்டதுரகே | ஆராய்ச்சி பிரிவுத் தலைவர், டிப்பெட் புரடக்ற் லிமிடெட் |
| திரு.எம்.டீ.சீ.பெரேரா | பிரதிப் பணிப்பாளர், NBRO |


**உணவுப் பொருள் பாதுகாப்பு மற்றும் பரிசோதனை தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| திரு. பீ.எஸ்.பீ.மென்டிஸ் | முன்னாள் பணிப்பாளர் / பிநிஅ, SLAB |
| டொக்டர் பிரதீப் காரியவசம் | பிரதம வைத்திய அதிகாரி, கொழும்பு நகர சபை |
| டொக்டர் ரீ.பீ.ஆனந்த ஜயலால் | பணிப்பாளர், (சுற்றாடல் மற்றும் தொழில்சார்) சுகாதார அமைச்சு |
| திரு. ஷான் தேஜக | ஆரோக்கிய முகாமையாளர், கொழும்பு ஹில்டன் |
| டொக்டர் (திருமதி) பீ தல்கஸ்வத்த | முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், SLSI |
| திரு. தம்மிக்க குணசேகர | இலங்கை உணவுப்பொருள் வழிமுறை நிறுவனம் |
| திரு. ஈ.ஜீ.சோமபால | முன்னாள் அரசாங்க பகுப்பாய்வாளர் |
| திருமதி சந்திமா சீதாங்கனி | Ind-Expo Certification Ltd |
| திருமதி சமிலா விஜேசிங்க | ஆய்வு அதிகாரி, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் |

**வாகன வெளிவீச்சு பரிசோதனை தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் ஆர்.ஏ.அத்தகே | தலைவர், கைத்தொழில் பொறியியல் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திரு. ஏ.டபிள்யூ.திசாநாயக்க | பணிப்பாளர், WET நிகழ்ச்சித் திட்டம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் |
| திரு.ஆர்.ஜீ.எஸ்.ஏ.பெரேரா | பிரதிப் பணிப்பாளர், MUSSD |
| திரு.ஜே.ஏ.கே.பீ.விஜேகுணசேகர | இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூடம், ITI |
| திரு. ஆர்.எம்.குலசேன | பிரதிப் பணிப்பாளர், காற்று கண்காணிப்பு பகுதி, மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| டொக்டர் டீ.எஸ்.ஜயவீர | பணிப்பாளர் நாயகம், பொது நிதி திணைக்களம், நிதி அமைச்சு |
| திரு. ஆர்.வீ.கே.கரவிட்ட | தகுதி நிலை பொறியியலாளர், பொறியியல் தரப் பிரிவு, SLSI |
| திரு. ஆர்.எம்.ஆர்.டீ.வீரசூரிய | சுற்றாடல் முகாமைத்துவ அதிகாரி, காற்று வள முகாமைத்துவ அதிகாரி |
| திரு. எல்.எச்.டீ.பந்துசோம | பிரதிப் பணிப்பாளர், இலங்கை தராதர அங்கீகார சபை |

## SLAB யின் ஸ்தாபக அமைப்பு நடவடிக்கைகள்



## தராதர ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்கள் - 2013

| வைத்திய ஆய்வுகூடத்தின் பெயர் | பரிசோதனைத் துறை |
|---|---|
| நவலோக மெற்றோபொலிஸ் ஆய்வுகூடங்கள், கொழும்பு - 02 | வைத்தியம் |
| றோயல் ஹொஸ்பிட்டல்ஸ் (தனியார்) நிறுவனம், கொழும்பு 06 | வைத்தியம் |

| சான்றிதழ் வழங்கும் அமைப்பின் பெயர் | பரிசோதனைத் துறை |
|---|---|
| IM வெரிட்டாஸ் சேர்டிபிகேஷன் சேர்விசஸ் (பிரை) லிமிட் | ஆளணி சான்றிதழ் QMS & AEA |

| ஆய்வுகூடத்தின் பெயர் | பரிசோதனைத் துறை |
|---|---|
| பேர்டிலைசர் டெஸ்டிங் ஆய்வுகூடம் சிலோன் பேர்டிலைசர் நிறுவனம் | இரசாயனப் பரிசோதனை |
| சொயில் அன்ட் பிளான்ட் அனலிசிஸ் லெபோட்டரி CIC அக்ரி பிஸ்னஸ் | இரசாயனப் பரிசோதனை |
| டோக்கியோ சிமென்ற் (லங்கா) நிறுவனம் பீஎல்சீ | இரசாயன மற்றும் இயந்திரவியல் பரிசோதனை |
| ஹொல்சிம் பாலாவி அனலிட்டிகல் ஆய்வுகூடம் ஹோல்சிம் லங்கா லிமிடெட் | இயந்திரவியல் பரிசோதனை |
| ஜியோ டெக்னிக்கல் அன்ட் ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு அக்ஸெஸ் என்ஜினியரிங் பீஎல்சீ | இயந்திரவியல் பரிசோதனை |

| பரிசோதனை அமைப்பின் பெயர் | பரிசோதனைத் துறை |
|---|---|
| இன்டர்நஷனல் குவாலிட்டி அன்ட் சேப்டி நிறுவனம் | பொழுதுபோக்கு பயணம் மற்றும் உபகரணங்கள் |